பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 6 ஞாயிற்றுக்கிழமை (22.07.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 235

# இனப்பிரச்சினைக்கு என்றுமே தீர்வு காணமுடியாத ஆபத்தான விசித்திரப் போக்கில் மஹிந்த அரசு!

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சாடுகிறார்





கொழும்பு,ஜூலை 22

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு மஹிந்த அரசு கைக்கொண்டுவரும் விசித்திரமான புதிய போக்கு - கொள்கை - அதற்கு என்றுமே தீர்வு - முடிவு - காணமுடியாத ஓர் ஆபத்துக்குள் தள்ளி விடும்.

இவ்வாறு கண்டனம் தெரிவித்திருக்கிறார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

மஹிந்த அரசின் கொள்கைகள், நிர்வாக முறைகள் நாட்டு நலனுக்கு குந்தகமானவை எதிரானவை என்றும் சந்திரிகா விமர்சித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆரம்பகாலம் தொடக்கம் பின்பற்றிவந்த - நாட்டை புதிய சகாப்தத்துக்கு இட்டுச்சென்ற - முக்கிய கொள்கைகளை மஹிந்த நிர்வாகம் மாற்றி அமைத்துள்ளது. இவை ஸ்ரீல.சு.கட்சிக்கு முற்றிலும் அந்நியமானவை -

இனப்பிரச்சினை, பொருளாதார வளர்ச்சி, ஆகியன குறித்த முற்றிலும் மாறுபாடான மஹிந்த அரசின் கொள்கைகள் அவற்றை ஒருபோதும் தீர்த்து வைக்க முடியாத ஆபத்துக்களை தள்ளிவிடும். ஊழல்கள் மலிந்து வருவது நிலைமையை மேலும் மேசமடையச் செய்யும் - என்று சந்திரிகா மேலும் சொன்னார்.

இதேவேளை, அவர் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீல.சு.க. மக்கள் பிரிவுகளின் கூட்டணியைப் பாராட்டி உள்ளார்.

ஐக்கியதேசியக் கட்சி - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவுக் கூட்டணியின் கொள்கைத் திட்டங்கள் நாட்டின் இன்றைய தேவைகளைப் பிரதிபலிப்பனவாக உள்ளதாக சந்திரிகா விமர்சித்தார்.

நேர்மையும் தேசபக்தியும் உள்ள சக்திகள் இணைந்து கூட்டணியாகப் பணி புரிவதன் மூலமே நாட்டின் பிரச்சினைகளை திறம்படத் தீர்க்க முடியும் என்பது எனது

(10ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி திருமலை விஜயம்

திருகோணமலை,ஜூலை 22

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா நேற்றுத் திருகோணமலைக்கு விஜயம் செய்தார்.

சிரேஷ்ட படை அதிகாரிகள் சகிதம் சென்ற இராணுவத் தளபதி கள நிலைமை குறித்துக் கேட்டறிந்தார்.

படை அதிகாரிகளுடன் கலந்துரையாடி அவர்களின் சேமநலன்களையும் தளபதி விசாரித்து அறிந்து கொண்டார். (அ-1)

## எழுதுமட்டுவாளில் புலிகளின் நடமாட்டம்

கொழும்பு,ஜூலை22

எழுதுமட்டுவாள் முன்னரங்க நிலைக்குச் சமீபமாக நேற்றுமுன்தினம் காலை நடமாடிய விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஐவர் மீது படையினர் தாக்குதல் நடத்தினர் என்று இராணுவத் தரப்பு தெரிவித்தது.

அவர்கள் கொல்லப்பட்டனர் என்றும் அப்பகுதியில் இருந்து 12ஆள்களுக்கு எதிரான கண்ணிகளைப் படையினர் மீட்டுள்ளனர் என்றும் படைத்தரப்பு மேலும் தெரிவித்தது. (அ-1)

## எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசைக் கலைக்கமாட்டோம்

### மக்களுக்குத் தெளிவுபடுத்தும் கூட்டத்தில் ஜனாதிபதி

கொழும்பு,ஜூலை22

எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தை கலைக்கமாட்டோம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ''மக்களுக்கு தெளிவுபடுத்தும்'' பொதுக் கூட்டம் நேற்று நாவலப்பிட்டி ஜயதிலக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:

'மஹிந்த சிந்தனை' மூலம் மக்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகளில் தொண்ணூறு வீதம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நான் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதாகவும் அவர்களுக்கு நிதி வழங்கியதாகவும் பொய்ப்பிரசாரங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

நாட்டுக்காக நிறைவேற்ற வேண்டிய பல பொறுப்புகளை அனைவரும் கொண்டுள்ளனர். அதை நிறைவேற்றுவதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொள்ளுங்கள். (10ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண சபையின் செயலாளராக விமானப் படையைச் சேர்ந்த குமரேசன்?

கொழும்பு, ஜூலை 22

கிழக்கு மாகாண சபையின் புதிய பிரதம செயலாளராக, விமானப்படையின் திட்டமிடல் பணிப்பாளர் ஏயர் கொமாடோர் எஸ். குமரேசன் நியமிக்கப்படக்கூடும் என்று கூறப்படுகின்றது.

பிரதம செயலாளராகப் பணியாற்றிய மேஜர் அபயவீர கடந்த 16ஆம் திகதி அவரது அலுவலகத்தில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

அவரது இடத்திற்குப் படை அதிகாரி ஒருவரை நியமிக்கவே அரசு முயற்சி மேற்கொண்டுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

விமானப்படையில் பணியாற்றும் குமரேசனை நியமிக்க அரசு பூர்வாங்கமாக முடிவு செய்துள்ள போதிலும், அவர் அந்தப் பதவியை ஏற்க விருப்பம் தெரிவிக்கவில்லை என்று கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(அ-1)

## அம்பாறை கஞ்சிகுடிச்சாறில் நேற்று புலிகள் - அதிரடிப்படையினர் மோதல்

கொழும்பு,ஜூலை 22

அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று மோதல் இடம்பெற்றது.

அதிரடிப்படையினர் 'நியத்ஜய' என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை ஒன்றை நேற்றுக்காலை 6.30 மணிக்கு ஆரம்பித்தனர்.

கஞ்சிகுடிச்சாறு நோக்கி மேற்கொள்ளப்பட்ட இந்த படை நடவடிக்கையின் போது இரு தரப்புக்கும் இடையில் மோதல் வெடித்தது.

மோதலின்போது அந்தப் பிரதேசத் தலைவர் ரவீந்திரன் உட்பட ஆறு விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாகப் படைத் தரப்புத் தெரிவித்துள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் புதிய ஜனாதிபதியாக பிரதீபா பட்டேல் தெரிவானார்



புதுடில்லி,ஜூலை22

இந்தியாவின் முதல் பெண் ஜனாதிபதியாக பிரதீபா பட்டேல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் இந்தியாவின் பதின் மூன்றாவது ஜனாதிபதியாவார்.

இந்தியத் தேர்தல் ஆணையம் இந்த முடிவுகளை நேற்று அறி வித்தது.

72 வயதான பிரதீபா பட்டேல், ஆளும் காங்கிரஸ் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டார். இதற்கு முன்னர் அவர் ராஜஸ்தான் மாநிலத்தின் ஆளுநராகப் பதவி வகித்தார்.

இந்தத் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் வேட்பாளரும் துணை ஜனாதிபதியுமான பைரோன் சிங் ஷெகாவத்தை 3 லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளால் பிரதீபா பட்டேல் வெற்றிகொண்டார்.

பிரதீபா பட்டேல் 6 லட்சத்து 38 ஆயிரம் வாக்குகளையும் பைரோன் சிங் ஷெகாவத் 3 லட்சத்து 31 ஆயிரம் வாக்குகளையும் பெற்றனர். தேர்தல் முடிவைத் தொடர்ந்து பைரோன் சிங் ஷெகாவத் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். (அ)

## மண்டைதீவில் தொழிலில் ஈடுபட்டவர்களை நோக்கி நேற்று வேட்டுக்கள்; ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஜூலை22

மண்டைதீவுக் கடற்பரப்பில் நேற்றுக் காலை 9 மணியளவில் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர் ஒருவர் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

ஆனைக்கோட்டை, சாவற்கட்டைச் சேர்ந்த சம்பந்தன் யோகேந்திரன்(வயது 39) என்பவரே காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அவரது வள்ளத்தை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன என்றும் அதனால் அவர் காயமடைந்ததுடன் வள்ளமும் சேதமடைந்தது என்றும் அதே பிரதேசத்தில் தொழில் செய்துகொண்டிருந்தவர்கள் தெரிவித்தனர். (அ-1-78)

## வவுனியாவில் கிளைமோர் தாக்குதல் சிப்பாய் பலி; மற்றொருவர் காயம்

வவுனியா,ஜூலை22

மன்னார் - வவுனியா வீதியில் தாளிக்குளம் என்னும் இடத்தில் ரோந்து சென்ற படையினரை இலக்கு வைத்து நேற்றுக்காலை 10.30 மணியளவில் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் இருபடையினர் படுகாயம் அடைந்த நிலையில் வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் அங்கு மரணமானார்.

மற்றைய சிப்பாய் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். (அ-1)

## ஸ்ரீல.சு.க. முக்கிய மாநாட்டுக்கு சந்திரிகாவுக்கு அழைப்பு இல்லை!

கொழும்பு,ஜூலை22

மஹரகம தேசிய இளைஞர் சேவைமன்றத்தில் இன்று நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 17 ஆவது சம்மேளன மாநாட்டுக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

கட்சியின் முன்னாள் தலைவரும் கட்சியின் முக்கியஸ்தருமான சந்திரிகாவுக்கு அழைப்பு அனுப்புவதில்லை என்று கட்சி முடிவு செய்திருந்தது.

ஐ.தே.கட்சின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சந்திரிகாவின் சகாவான (10ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கின் பாதுகாப்பு நிலை கேள்விக்குறியாக உள்ளது?

கொழும்பு,ஜூலை 22

கிழக்கு முழுமையாக மீட்கப்பட்டதாக அரசு அறிவித்துள்ள போதிலும், அதன் பாதுகாப்பு கேள்விக்குறியாகவே உள்ளது.

கிழக்கை முழுமையாகக் கைப்பற்றியிருப்பதாக அரசு அறிவித்திருப்பினும் அங்கு நூற்றுக்கு மேற்பட்ட விடுதலைப்புலிகள் ஊடுருவியிருக்கக்கூடும் என்று புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருப்பதாகப் பாதுகாப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதிஉயர் பாதுகாப்புப் பகுதிக்குள் (10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கழுத்து வெட்டப்பட்ட நிலையில் மருதனார்மடத்தில் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 22

மருதனார்மடம் - கோப்பாய் வீதியில், இணுவில் ரயில்வே கடவைக்குச் சமீபமாக தலை வெட்டப்பட்ட நிலையில் சடலம் ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

அந்தச் சடலம் நீர்வேலி, அச்செழுவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான குணராசா மோகன் (வயது 37) என்பவருடையதென அடையாளம் காணப்பட்டது.

மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் நேற்றுச் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

இறந்தவர் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் மயிலங்காட்டுக்கு நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றுள்ளார். அங்கிருந்து அவர் நண்பர்களுடன் சென்றுகொண்டிருந்த வேளை, மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அவரைக் கடத்திச் சென்றனர். பின்னர் நேற்றுக்காலை சடலம் மீட்கப்பட்டது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(அ-1-78)

# புலிகளுக்கு உதவிய 25 சிங்களவர்களையும் தொடர்ந்து தடுத்து வைக்க நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, ஜூலை 22

விடுதலைப் புலிகளுக்கு உதவினார்கள் எனக் கைது செய்யப்பட்ட 25 சிங்களவர்களைத் தொடர்ந்து தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு கொழும்பு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. இவர்களை அடுத்த மாதம் 3ஆம் திகதி வரை தடுத்து வைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளுக்கு உதவி புரிந்தார்கள் என்ற சந்தேகத்தில் 25 சிங்களவர்கள் கைது செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே.

அவர்களை விசாரணை செய்து மேலும் விவரங்களை அறியவேண்டியுள்ளது. அதற்கு வசதியாக அவர்களை தொடர்ந்து தடுத்து வைத்து விசாரணை செய்ய அனுமதிக்குமாறு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலீஸார் நீதிவானிடம் கோரினார். நீதிமன்றம் அதற்கு அனுமதி வழங்கியது.

சிங்கள நபர் ஒருவருக்குச் சொந்தமான வீட்டை விடுதலைப்புலிகளிடம் நிதி பெற்று கொள்வனவு செய்ததாகக் கூறப்படும் மற்றொரு சிங்களவரையும் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதிக்குமாறு பயங்கரவாதத் தடுப்புப் பொலீஸார் விடுத்த கோரிக்கையையும் நீதிமன்றம் ஏற்று அனுமதி வழங்கியது.

(அ-1)

## நகரின் சில இடங்களில் குடிதண்ணீர் விநியோகம் தடைப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 22

மாநகரசபைப் பகுதிக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் பிரதான தாங்கியில் இருந்து செல்லும் குழாயில் சேதம் ஏற்பட்டுள்ளது.

அதன் காரணமாக மடம் வீதியில் இருந்து நாவாந்துறை வரையிலான குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது என்று யாழ்.மாநகர சபையின் செயலாளர் இ.இரத்தினசிங்கம் அறிவித்துள்ளார்.

திருத்த வேலைகள் பூர்த்தியாகும் வரை தண்ணீர் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

(அ-1)

## கண்ணீர் அஞ்சலி

வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் *த.நடராஜா* அவர்களின் அன்பு மைத்துனர்

அமரர் தாமோதரம்பிள்ளை அருந்தவநாதன் அவர்கள்

19.07.2007 இல் காலமானதையிட்டும் மற்றும்

எமது சபையின் தொ.நு. உத்தியோகத்தர் *து.பத்மராஜன்* அவர்களின் அன்புத் தாய் **அமரர் பத்மநாயகி துரைசிங்கம்** அவர்கள்

14.07.2007 இல் காலமானதையிட்டும்

அவர்களது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னார்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

- வலி.கிழக்கு பிரதேச சபை சமூகம்.


## விற்பனைக்கு

தொலைத்தொடர்பு நிலையத்திற்குரிய கவுண்டர் மேசை, தொலைபேசி (B) பூத், மற்றும் LG-AC (குளிரூட்டி), வீடியோக் கடைக்குரிய சோக்கேஸ், VCDக்கள், VCD படப் பிரதிகள் (VHS), துவிச்சக்கர வண்டி (ஆண்) என்பன விற்பனைக்குண்டு.

27,கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
0777 754339


# மரண அறிவித்தல்

## செல்லத்துரை சண்முகதாசன் (பேபி)

(உரிமையாளர் - 'அல்டி' எலக்ரோனிக்ஸ்)



யாழ்ப்பாணம், கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சண்முகதாசன் (உரிமையாளர், 'அல்டி' எலக்ரோனிக்ஸ்) நேற்றுமுன்தினம் (20.07.2007) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் ஜெயரஞ்சனியின் அன்புக் கணவரும் நிரோஷ், சோபிகா (யா/வேம்படி மகளிர் கல்லூரி, கணித உ/த 2009), நிஷா (யா/வேம்படி மகளிர் கல்லூரி - தரம் 9) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்லத்துரை - தெய்வயானைபிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் அளவெட்டி பொன்னுத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் தேவராணி தியாகராஜா (ஆசிரியை, யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்), பாரதிதாசன் (ஜேர்மனி), மோகனதாசன் (ஆஸ்திரேலியா), கோகிலராணி, கண்ணதாசன் (பிரான்ஸ்), முருகதாசன் (ஜேர்மனி), ஐங்கரதாசன் (கனடா), ஜமுனாராணி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஸ்ரீதரன், மனோரஞ்சினி (கனடா), கெங்காதரன் (பிரான்ஸ்), மாயாரஞ்சினி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2007) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*11, அத்தியடிபுதுவீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி/53009)

*தகவல்:*
**மனைவி, பிள்ளைகள்.**

## கண்ணீர் காணிக்கை

புங்குடுதீவு 3ஆம் வட்டாரம் முத்துமாரியம்மன் ஆலயக் குருக்களும், 2005 இல் இருந்து அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான குருக்களாகப் பணியாற்றும்

*பிரம்மஸ்ரீ சிவசிவகுமாரக்குருக்கள்*
*பிரம்மஸ்ரீ சிவசுரேஸ்வரக்குருக்கள்*

ஆகியோரின் சகோதரர்

அமரர் **ஸ்ரீ சிவ தினேஸ்சர்மா**

அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்துள்ளதோடு, அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அம்பிகையை வேண்டுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பரிபாலன சபையினர்,
அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ
முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.

## விழிகளில் நீர் வழிய....

எமது அன்புத் தோழி சோபிகாவின் அன்புத் தந்தை



அமரர் **செல்லத்துரை சண்முகதாசன்**
*(ALDI ELECTRONICS)*

அன்பினைக் கொடுத்து
எண்ணங்களை உயர்த்தி
வெற்றி என்ற ஏணிப்படியின் உயரங்களை நோக்கி
சோதனைகளைச் சாதனையாக்கி
சில படிகளில் ஏற்றி;
மேலும் உயர வழிவகுத்து
அதைத் தாம் காண முடியாத
நிலையிலுள்ள எங்கள் தந்தையே!

உமது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்திக்கும் இறைவனை வேண்டுகின்றோம்.

*கண்ணீர் காணிக்கையுடன்,*
**நண்பர்கள் - 2009 A/L**

# மரண அறிவித்தல்கள்

## யோகநாதன் பிறேமாதேவி



பலாலி தெற்கு, வசாவிளானைச் சொந்த முகவரியாகவும் ஏழாலை தெற்கை தற்காலிக முகவரியாகவும் கொண்ட யோகநாதன் பிறேமாதேவி (பிறேமா) நேற்று (21.07.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் யோகநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் தவமணிதேவி, சுரேஸ்குமார், ரவிக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவசுப்பிரமணியம், பேரின்பகுமாரி, வனிதா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2007) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக குப்பிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
ஏழாலை தெற்கு, மதவடி,
சுன்னாகம்.

சொந்த முகவரி:
பலாலி தெற்கு,
வசாவிளான். (65853)

*தகவல்:*
**ரவி *(சகோதரன்)*.**

## சிவசுப்பிரமணியக்குருக்கள் தினேஷ் சர்மா

**(புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயப் பிரதமகுரு)**

புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியக் குருக்கள் தினேஷ்சர்மா நேற்றுமுன்தினம் (20.07.2007) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியக் குருக்கள் - புஸ்பாவதி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள் - யோகாம்பாள் தம்பதியரின் மருமகனும் ஹர்சினியின் அன்புக் கணவரும் தனஞ்சயனின் அன்புத் தந்தையும் அருணோதயக் குருக்களின் மைத்துனரும் சிவகுமாரக்குருக்கள், சிவகாமசுந்தரி, ரஞ்சனி, சுரேஸ்வரக் குருக்கள், ரமேஸ் சர்மா ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லமான 138, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியில் இன்று (22.07.2007) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் பாற்பண்ணை வீதி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*138, பாற்பண்ணை வீதி,*
*திருநெல்வேலி.* (62852)

*தகவல்:*
**சிவகுமாரக் குருக்கள்.**
*(சகோதரர்).*

## குணசிங்கம் ரகுபாலன்



கோப்பாய் மத்தி, பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குணசிங்கம் ரகுபாலன் 20.07.2007 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணசிங்கம் - செல்லமணி தம்பதியரின் அன்பு மகனும் ரமேஷ், ராஜ்மோகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சயந்தாவின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பிள்ளையார் கோயிலடி,*
*கோப்பாய் மத்தி.* (62648)

*தகவல்,*
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவெறி கோரத்தாண்டவம் ஆடி ஈழத்தமிழர் மனங்களில் ஆறாவடுவை ஆழப்பதித்த 83இன் ஆடி அனர்த்தம்!

*ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே...!*

1983ஆம் ஆண்டு வரையில் ஆடிப்பிறப்பினை நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் மேற்கண்ட பாடலைப்பாடி ஆனந்தமாகக் கொண்டாடிவந்த தமிழ் சிறுவர்கள், தமிழ் பாடசாலை மாணவர்கள், தமிழ் இளைஞர்கள் அனைவருமே அந்த ஆண்டு ஆடி மாதம் 23ஆம் திகதியுடன் தமது ஆடிமாத கொண்டாட்டத்தை நிறுத்திக் கொண்டுவிட்டனர்.

ஆடிப்பிறப்பின் மீதோ, அதன் பாரம்பரிய கலாசார விழுமியம் மீதோ கொண்ட வெறுப் பல்ல இதற்குக் காரணம். ஆடிப்பிறப்பை ஆனந்தமாகக் கொண்டாடும்படி கூறி அதற்கென அழகான பாடல் ஒன்றைத் தீட்டிக் தந்த தமிழ்ப் புலவர் மீது ஏற்பட்ட வெறுப்போவல்ல அதற்குக் காரணம்.

### கறைபடிந்த மாதம்

ஆடிமாதம் இலங்கையின் வரலாற்றில் என்றென்றுமே அழித்தொழிக்க முடியாத கறைபடிந்த மாதமாக 1983ஆம் ஆண்டுமுதல் மாற்றப்பட்டுவிட்டது. தமிழர் மனங்களில் சிங்களப் பேரினவாதம் ஏற்படுத்திவிட்ட வடுக்கள் சீழ்கொட்டும் ரணங்களாக நிலைத்துவிட்டன.

இந்த வடுக்கள் என்று மாறுமோ- என்று, இந்த ரணங்கள் என்று ஆறுமோ அன்று தான் மீண்டும் ஆடிப்பிறப்பு தமிழ் நெஞ்சங்களில் மீண்டும் ஆனந்தத்தை விளைவிக்கமுடியும். அப்பொழுதுதான் ''ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே'' என்று தமிழ்ச்சிறார்கள் கூத்தாடமுடியும்.


அந்தநாள் எப்பொழுது வரும்? யார் ஏற்படுத்துவார்கள்?

### கற்பழிக்கப்படும் ஜனநாயகம்

இந்த நாட்டில் தமிழர் என்று ஓர் இனம் வாழ்கின்றது. அந்த இனத்தின் அடிப்படை உரிமைகள் மற்றும் வாழ்வுரிமைகள், வாழ்வாதார உரிமைகள் அனைத்துமே பெரும்பான்மை என்ற ஜனநாயக தத்துவத்தின் பேரால் சிங்கள இனவாதிகளினால் படிப்படியாகப் பறிக்கப்பட்டு வருகின்றன. அதன் காரணமாக அந்த மக்கள் கிளர்ந்தெழுந்து தமது வாழ்வாதாரப் பிறப்புரிமைகளை நிலைநாட்டிக்கொள்ள போராடத்தொடங்கியுள்ளார்கள் என்ற வகையில் உலக மக்களை உணர்ந்துகொள்ளவைத்த மாதம் இந்த ஆடி மாதம் ஆகும்.

### அவர்களுக்கு மிகச் சாதாரண விடயம்

1983 ஆம் ஆண்டு ஆடிமாதம் (ஜூலை) 23ஆம் திகதி தொடங்கிய இனக்கலவரத்தில் ஆயிரக் கணக்கானவர்கள் படுகொலை செய்யப்பட்டமை, பல்லாயிரக்கணக்கானவர்கள் அழிந்து நொறுங்கிக் குற்றுயிராக்கப்பட்டமை தமிழரின்



வீடுகள், வர்த்தக நிலையங்கள் யாவும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டமை இவை யாவும் இன்று நாட்டிலுள்ள பெருந்தலைவர்களுக்கெல்லாம் மிக சாதாரண விடயங்களாகி, மறந்துபோன விடயங்களாகி விட்டன.

1956ஆம் ஆண்டிலிருந்து காலத்துக்குக் காலம் அழித்தும், கொன்றும், அகதிகளாகத் துரத்தியும் தமிழர்களை துவம்சம் செய்த சிங்கள இனவாதிகள், அடிப்படைவாதிகள் அந்த ஆடிக்கலவரத்தை கறுப்பு ஜூலை மாதத்தை மறந்து போனார்கள். ஏனென்றால் அன்று கொல்லப்பட்டவர்களும் தீவைத்துக் கொளுத்தப்பட்டவர்களும் தமிழர்கள் - அதனால் அந்தப் பேரினவாதிகள் அதனைச் சுலபமாக மறந்துவிட்டார்கள்.

அவர்கள் மறந்துவிடலாம். அந்தக் கலவரத்தில் தம் உயிருக்குயிரான பிள்ளைகளை, பெற்றோரை மற்றும் இன பந்துக்களை துடிதுடிக்க இழந்துவிட்ட தமிழ்மக்களால் இலகுவில் மறந்துவிடமுடியுமா? மறக்கும் வகையில்தான் ஏதாகிலும் செய்தார்களா? எரிகிற விறகில் எண்ணெய் ஊற்றுவதுபோல் காரியங்கள் அல்லவா நடைபெறுகின்றன.

### அன்றைய நாள் ஒரு சம்பவம்

அந்த நாளில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தை பின்வருமாறு எழுதியுள்ளார் ஒரு கட்டுரையாளர்.

''... குண்டர்கள் கூட்டமொன்று நான் பயணித்த பஸ்வண்டியை அண்மித்தது. தமிழர்கள் எவராவது இருகிறார்களாவென ஒருவன் நடத்துநரிடம் கேட்டான். முகத்தில் ஒரு புன்னகையுடன் முன்னால் ஆசனத்தில் அமர்ந்திருந்த தமிழ்ப் பெண்ணைச் சுட்டிக் காட்டினார் அவர். பாதி உடைந்த போத்தல் ஒன்றினால் பீதியுற்றிருந்த அந்தப் பெண்ணின் வயிற்றில் குத்தினான் ஒருவன். அந்தக்கணமே பஸ்ஸில் இருந்த அனைவரும் இறங்கி ஓடினர். நானும் இறங்கி வீதியில் ஆவேசத்துடன் காணப்பட்ட சிங்களவர்கள் மத்தியில் சென்று நின்றுகொண்டேன். இரத்தம் தோய்ந்து போயிருந்த அந்தப் பெண்ணின் உடலை பஸ் வண்டியின் சிறிய கண்ணாடி யன்னல் ஊடாக தெண்டித் தள்ளினார்கள். அவ் வாறு வெளியில் எறியப்பட்ட பெண்ணின் உடலில் ஒருவன் பெற்றோல் ஊற்றி கொளுத்தினான். குண்டர்கள் ஆரவாரம் செய்து நடனமாடினார்கள்''.

இதுபோல் எத்தனையோ நெஞ்சை உருக்கும் - உன்மத்தராக்கும் சம்பவங் கள் உண்டு.

1983 ஜூலை 23ஆம் திகதி நள்ளிரவில் தோன்றிய தமிழர் அழிப்புக் கலவரம் இந்திய வெளிவிவகார அமைச்சர் டி.வி. நரசிம்மராவின் வருகை வரை நீடித்தன.

தமிழர் மீதான இவ்விதத் தாக்குலை தடுத்து நிறுத்த எந்த ஓர் அரசியல் தலைவரும் பகிரங்கமாகவோ மறைமுகமாகவோ அன்று முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. உரிமை கேட்டுப் போராடும் தமிழர் மீதான சிங்களவரின் ஆவேசம் தீரும் மட்டும் அது தொடரட்டும் என்று இருந்துவிட்டார்கள். தமிழர்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிபீடம் ஏறும் சிங்களத்தலைவர்கள்.

### கைதிகள் படுகொலை

ஜூலை 25ஆம் திகதி வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 53 தமிழ்க்கைதிகள் படுகொலைசெய்யப்பட்டனர். மகஸின் மற்றும் வெலிக்கடைச் சிறைகளில் குண்டர்களால் கொல்லப்பட்டவர்களில் குட்டிமணி, ஜெகன், தங்கதுரை ஆகிய போராளிகளும் அடங்குவர்.

ஆடிக்கலவரம் நிகழ்ந்து 23 ஆண்டுகள் கடந்துவிட்டன.

தமிழீழ விடுதலைப்புலிகள் 1983 ஜூலை மாதம் 23ஆம் திகதி திருநெல்வேலியில் இராணுவத்தின் படையணி ஒன்றின் மீது நடத்திய தாக்குதலில் 13 படையினர் உயிரிழந்தனர். இவ்வாறு உயிரிழந்த இராணுவத்தினரின் உடல்கள் கொழும்பு கனத்தை மயானத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதையடுத்து - மயானத்துக்கு வந்திருந்தவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கலவரம் நாடு முழுவதும் பரவி பல நூற்றுக்கணக்கான அப்பாவிகளின் உயிர்கள் பலியாகின. பல நூறுபேர் காயமுற்றனர்.

### இம்சையும் அவமானமும்

தமிழர்களின் வீடுகள், வர்த்தக நிலையங்கள் நாசமாக்கப்பட்டன. இவற்றுக்கெல்லாம் மேலாக பிற மாவட்டங்களில் வாழும் தமிழர்கள் இம்சைகளுக்கும் அவமானங்களுக்கும் உள்ளாகினர்.

இன நல்லுறவில் அக்கறை கொண்டவர்களாக இருந்திருந்தால் அன்றைய தலைவர்கள் உடனடியாகவே கலவரங்களை நிறுத்தியிருக்க முடியும். இன ரீதியில் அரசியல் நடத்திப் பழக்கப்பட்டு போனவர்களால் அவ்வாறு செய்ய முடியவில்லை!

தமிழர்களுக்கு எதிராக ''அவர்களை விட நாங்களே திறமாகச் செயல்படுகிறவர்கள்'' என்றவாறு சிங்களப் பெரும்பான்மை மக்களுக்குக் காட்டிக் கொள்வதும் அதன்மூலம் வாக்குச்சீட்டுக்களை அதிகமாகப் பெறுவதும் மிக இலாபகரமான அரசியலாகப் போய்விட்டது இந்த நாட்டில்.

இவற்றுக்கு மேலாக எழுந்து சகல இன மக்களும் ஏகோபித்து ஏற்றுக்கொள்ளும் வகையில் ஒரு தேசியத்தலைமை உருவாகும்வரை ஜூலைக் கலவரத்தின் அகோரம் மறக்கப்படுவது துர்லபமே.

**- பரசு -**

அப்படி ஒரு தலைவர் தோன்றுவார் எனக் கனவு தானும் காணமுடியாது. சிங்கள தேசத்தில் இனத்துவேஷமும், இனத்துரோகமும் முன்னர் இருந்ததை விட மேலும் அரசியல் தலைவர்களால் வளர்க்கப்பட்டு வருவதே நிதர்சனமாகும்.

இன்றைய அரசும், அரசுத் தலைவரும் முன்னர் இருந்தவர்களை விடவும் அதிசிறந்த இனவாதி என்ற உச்சத்தைத் தொடர்வதற்குச் செயற்பட்டுக்கொண்டிக்கிறார். வாயால் இன சமத்துவமும் அபிவிருத்தியும் பேசிக்கொண்டு!

எங்கோ ஒரு சம்பவம் இடம்பெற வேறோர் இடத்தில் அப்பாவிகளைப் பழிவாங்கும் நிலைமை மாறவேண்டும். பொதுமக்களைப் பொதுமக்களாகவே கருதி- அப்பாவிகளைத் துன்புறுத்தாத விதத்தில் செயற்பாடுகளை முன் நகர்த்த அரசு காரியமாற்றினால் - அந்தவகையில் அரச படைகள் அறிவுறுத்தப்பட்டால் வன்செயல்கள் பெரும்பாலானவைகளைக் கட்டுப்படுத்தமுடியும்.

ஆடிக் கலவரத்தில் மறக்கும் நாள் ஒன்று வருமோ? தமிழர் மனங்கள் ஆறுதல் தான் பெறுமா...?

★

# டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 700 விக்கெட்டுகளைச் சாய்த்த முதலாவது ஆசியர் முரளிதரன்!

கிரிக்கெட் வரலாற்றில் 700 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவர்களின் வரிசையில் இலங்கை அணியின் சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனும் இடம்பிடித்துள்ளார்.

கடந்த 14ஆம் திகதி சனிக்கிழமை பங்களாதேஷுடனான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் தொடரில் அவர் தனது 700 ஆவது விக்கெட்டைக் கைப்பற்றியதன் மூலம் கிரிக்கெட் வரலாற்றில் 700 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவர்களின் வரிசையில் இரண்டாவது இடத்தைப் பிடித்துக்கொண்டார் முரளி.

ஒரு டெஸ்ட் போட்டியின்போது 10 விக்கெட்டுக்களை வீழ்த்திய சாதனையை 35 வயதான முரளிதரன் 20 ஆவது தடவை நிகழ்த்தியுள்ளார்.

இறுதியாக கடந்த 14ஆம் திகதி கொழும்பு அஸ்கிரியவில் பங்களாதேஷுடன் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியின்போது அவர் இந்த சாதனையை நிகழ்த்தினார். அந்தப் போட்டியின் முதல் இனிங்ஸில் 28 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களையும், இரண்டாவது இனிங்ஸில் 54 ஓட்டங்களைக் [illegible] கொடுத்து 6 விக்கெட்டுக்களுமாக மொத்தம் 12 விக்கெட்டுக்களை அவர் அன்றைய போட்டியில் வீழ்த்தினார்.

அன்றைய போட் [illegible] டியில் பங்களாதேஷ் அணி வீரர் சைட் ரஸலின் விக்கெட்டை வீழ்த்திய தன் மூலம் அவர் தனது டெஸ்ட் வரலாற்றில் 700 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.


டெஸ்ட் வரலாற்றில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர் என்ற பெருமையை ஆஸ்ரேலியாவின் சுழல் பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் தக்க வைத்துக்கொண்டுள்ளார். அவர்

## ஓய்வுபெறமுன் 1000 விக்கெட்டுக்களை வீழ்த்துவதே முரளியின் விருப்பமாம்

145 டெஸ்ட் போட்டிகளில் 708 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இரண்டாவது இடத்தில் முத்தையா முரளிதரன் உள்ளார். இவர் 113 போட்டிகளில் 700 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். மூன்றாவது இடத்தில் ஆஸ்திரேலியாவின் கிளேன் மக்ராத் உள்ளார். 124 போட்டிகளில் 563 விக்கெட்டுக்களை அவர் வீழ்த்தியுள்ளார்.

இந்தப் போட்டியின் பின்னர் முரளி பத்திரிகையாளர்களுக்கு அளித்த செவ்வியில் பின்வருமாறு கூறியுள்ளார்.

700 விக்கெட்டுகள் என்பது மிகப் பெரிய இலக்கு. அதனை நான் அடைந்திருக்கின்றேன். ஆயிரம் விக்கெட்டுக்களை வீழ்த்துவது என்பது மிகப் பெரும் சவால். ஆயினும் அந்தச் சாதனையை நான் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு



பெறுவதற்குள் நிகழ்த்துவதற்கு எண்ணியுள்ளேன். அடுத்த உலகக்கிண்ணப் போட்டி வரை விளையாடுவதற்கு நான் தற்போது உத்தேசித்துள்ளேன் - என்றார் அவர்.

டெஸ்ட் போட்டிகளில் 708 விக்கெட்டுகளைக் கைப்பற்றி முதலிடத்தில் உள்ள ஆஸ்ரேலிய பந்து வீச்சாளர் ஷேன் வோர்னின் சாதனையை இலங்கையணி எதிர்வரும் நவம்பர் மாதம் ஆஸ்திரேலியாவுக்கு மேற்கொள்ளவுள்ள டெஸ்ட் சுற்றுப் பயணத்தின்போது முத்தையா முரளிதரன் முறியடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆஸ்திரேலியா சுற்றுப் பயணத்தின்போது தற்போதைய உலக சாதனையை முறியடிப்பது என்பதை விட அந்தத் தொடரை வெல்ல வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு என்கிறார் முரளி.

1995ஆம் ஆண்டு மெல்போனில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் போது டாலி ஹெயர் என்ற நடுவர், முரளிதரன் பந்தை எறிவதாகத் தெரிவித்த குற்றச்சாட்டுக் காரணமாக முரளியின் முன்னேற்றம் சிலகாலம் தடைப்பட்டிருந்தது. [illegible] முறையான பந்து வீச்சு என நிரூபிக்கப்பட்ட போதும் அது தொடர்பாக ஒருசில தரப்புக்கள் இப்போதும் சர்ச்சைகளைக் கிளப்பி வருகின்றன.

### முதலாவது ஆசியர்

தற்போது நடைபெற்ற பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் முதல் இனிங்ஸில் 6 விக்கெட்டுக்களை வீழ்த்திய முரளி இரண்டாவது இனிங்ஸில் சதாகத் ஹீசைன் (5) விக்கெட்டுகளைக் கைப்பற்றி, டெஸ்டில் 60 ஆவது முறையாக ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தினார். இது அவருக்கு 699 ஆவது விக்கெட்டாகவும் அமைந்தது.

இதையடுத்து சொந்த மண்ணில் முரளிதரன் 700 விக்கெட்டுகளை வீழ்த்துவார் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடம் அதிகரித்தது. இரண்டாவது இனிங்ஸின் 59 ஆவது ஓவரை முரளிதரன் வீசினார்.

முதல் நான்கு பந்துகளை வீண்செய்த சைட் ரஸல் 5ஆவது பந்தில் ஒரு பவுண்ரி அடித்தார். 6 ஆவது பந்தையும் இவர் அடித்து ஆடமுயன்றார். ஆனால், காற்றில் பறந்து சென்ற பந்து மகரூப் கையில் தஞ்சமடைய, முரளிதரன் டெஸ்டில் 700 ஆவது விக்கெட்டுகளை வீழ்த்தி, அசத்தினார். இதன்மூலம் டெஸ்டில் இம்மைல் கல்லை எட்டிய முதல் ஆசிய வீரர் மற்றும் உலகளவில் இரண்டாவது வீரர் என்ற பெருமை பெற்றார்.

இலங்கை தொடரை 3-0 என்ற போட்டிக் கணக்கில் முழுமையாக [illegible] றது. ஆட்ட நாயகன் மற்றும் [illegible] தொடர் நாயகன் விருதை [illegible] முரளிதரன் தட்டிச்சென்றார்.

### பாக். பயிற்சியாளராக ஆஸியின் ஜெப் லாசன்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக, ஆஸ்திரேலியாவின் ஜெப் லாசன் நியமிக்கப்பட்டுள்ளார்.



ஜெப் லாசன்

இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அண்மையில் வெளியிட்டது.

உலகக்கோப்பை தொடரின்போது பாக். பயிற்சியாளர் பொப் வூல்மர் சர்ச்சைக்குரிய முறையில் மரணம் அடைய, புதிய பயிற்சியாளரைத் தேர்வு செய்ய பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தீவிரம் காட்டி வந்தது.

வெளிநாட்டு பயிற்சியாளரை நியமிக்கும் ஆர்வம் இருந்ததால் ஆஸ்திரேலியாவின் வட்மோர், ஜெப் லாசன், ரிச்சர்ட் டான் ஆகியோரிடமும் நேர்காணல் நடத்தியது. பயிற்சியாளராக வட்மோருக்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாக முதலில் செய்திகள் வெளியாயின.

ஆனால் வட்மோருக்கு பாகிஸ்தான் வீரர்களிடம் போதிய ஆதரவு இல்லை. ஜெப் லாசனை பயிற்சியாளராக நியமிக்க வீரர்கள் விருப்பம் தெரிவித்தனர். அணியின் முகாமையாளர் தலத் அலி உள்ளிட்ட மற்ற நிர்வாகிகளிடமும் லாசனுக்கு பெரும் ஆதரவு கிடைத்தது. வீரர்கள் மற்றும் நிர்வாகிகளின் கருத்துக்களுக்கு முன்னுரிமை கொடுத்த கிரிக்கெட் சபை, ஜெப் லாசனை பயிற்சியாளராக ஒருமனதாகத் தேர்வு செய்துள்ளது. இதன் காரணமாக இவருடன் பயிற்சியாளர் பதவிக்கு போட்டியிட்ட ஆஸ்திரேலியாவின் வட்மோர் மற்றும் ரிச்சாட் டான் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

தேர்வு பெற்றது குறித்து ஜெப் லாசன் கூறுகையில், 'பாகிஸ்தான் அணிக்கு பயிற்சியாளராகத் தேர்வு பெற்றது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. இத்தகவலை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எனக்குத் தெரிவித்தது. உலகின் தலைசிறந்த வீரர்களை உள்ளடக்கிய பாகிஸ்தான் அணிக்கு பயிற்சி அளிப்பது பெரும் சவாலான விஷயம். சவாலை ஏற்று சிறப்பாக செயல்படுவேன்' என்றார்.

## அனைத்துலக அரங்குகளில்

தற்போது 49 வயதாகும் லாசன் மிகச் சிறந்த வேகப்பந்துவீச்சாளராக விளங்கினார். ஆஸ்திரேலிய அணிக்காக 46 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 180 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். 79 ஒருநாள் போட்டிகளில் 88 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார்.

லாசன் தேர்வு செய்யப்பட்டுள்ளதால், அதிகம் பாதிக்கப்பட்டவர் வட்மோர்தான். முன்னதாக பங்களாதேஷ் அணியுடனான ஒப்பந்தத்தை முடித்துக்கொண்ட இவர், அதைத் தொடர விரும்பாமல் வெளியேறினார். அதற்கு பின் இந்தியாவுக்கு பயிற்சி அளிக்க விருப்பம் தெரிவித்திருந்தார். ஆனால் கடைசி நேரத்தில் வட்மோரை புறக்கணித்தது இந்திய கிரிக் கெட் சபை. இறுதியில் பாகிஸ்தானும் வாய்ப்பை மறுத்துவிட்டதால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார் வட்மோர்.

**டிலான்**

### இன்சமாம் அதிரடி நீக்கம்



இன்சமாம்

அடுத்த ஆறு மாத காலத்துக்கான சம்பள ஒப்பந்த பட்டியலில் இருந்து பாகிஸ்தான் முன்னாள் அணித்தலைவர் இன்சமாம் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் அனுபவம் மற்றும் திறமையின் அடிப்படையில் குழு 'ஏ', 'பி', 'சி' என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒப்பந்த முறையில் சம்பளம் பெற்று வருகின்றனர். வரும் டிசம்பர் வரையிலான ஆறு மாத கால ஒப்பந்த முறைக்கு 20 பேரை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தேர்வு செய்தது. இன்சமாமுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

SHARP TONER (No 1) SF-126ST. விற்பனைக்குண்டு

திருமுருகன் கொம்நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 7835

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. 021 222 7310.

## விற்பனைக்கு

**AHUJA தயாரிப்புகள்**

Ahuja தயாரிப்புகளாகிய அம்பிலிபையர், மைக், ஸ்டான், யுனிற், கோன் நியாயமான விலையில் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம். கோவில்கள், பாடசாலைகள், தேவாலயங்கள், நூல் நிலையங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் போன்றவற்றிற்கு விசேட கழிவுகள் உண்டு.

தொடர்பு: K.றமணன், 50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
T.P.No. 021 222 6083

(62806)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 10 ★ 12 ★ 1944



உதிர்வு 23 ★ 06 ★ 2007

திருமதி
### சிவலோகநாயகி கந்தசாமி

கண்ணீரோடு ஒரு திங்கள் போனதன்னையே
பாசமிகு அம்மாவே! அன்பான அக்காவே!
ஆயிரம் உறவுகள் சேர்ந்து வந்து நின்றாலும்
உங்களுக்கு எதுவும் ஈடாகாது தெய்வமே!

பன்னாலை,
தெல்லிப்பழை. (62712) - குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 20 11 1937



இறைவன் அடியில் 02 08 2006

### திருமதி இரத்தினம் பசுபதி

திதி: 22.07.2007

ஆண்டொன்று ஆனாலும் - அம்மா
ஆறாது எம்மனது
ஆண்டாண்டு சென்றாலும் - அம்மா
நீங்காது உங்கள் நினைவுகள்
எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

புலோலி மேற்கு,
திருநாவலூர், பருத்தித்துறை.
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(சி/53003)


## விற்பனைக்கு

பரப்பு 1 குளி 12.3 (1¾) விஸ்தீரணம் கொண்ட காணியில் சகல வசதிகளும் கொண்ட வீடு சுண்டிக்குளி (ரச்சமோட்டையில்) விற்பனைக்குண்டு. தொடர்பு: S.S.நாதன், 16/3, ரச்சமோட்டை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். T.P.: 0776146434 (62784)

## ENGLISH CLASSES

One person or small groups above Grade 5.
By and experienced graduate teacher.
Nachchimar Kovilady, Jaffna.
Contact: 0776615748 (62123)

## காணி விற்பனைக்கு

யாழ்.ஸ்ரான்லி வீதியில் வின்சர் திரையரங்குக்கு அண்மையில் 2 பரப்பு ஆறுகுளி கொண்ட வெறும் காணி உடன் விற்பனைக்கு

தொடர்பு: செ.சுப்பிரமணியம்
167/10, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 3826
(62807)

## வான் விற்பனைக்கு உண்டு

250-xxxx தொடர் இலக்கத்தைக் கொண்ட (Nission Serena) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
T.P. 0776660687 (62824)

## K.C. திருமண சேவை

அரச, உயர் பதவி, உள்நாடு - வெளிநாடு மணமக்களது ஜாதகக் குறிப்புக்கள் உண்டு. தொடர்பு: நேரம் காலை 9 மணி முதல் பகல் 2 மணி வரை. *இல. 49/1, பூநாரி வீதி, கொக்குவில்* மேற்கு (சந்திரன் கடை முன்பாக). T.P. 4591223. (62729)

## டெக் விற்பனைக்கு

பனசோனிக் டெக் (Recording செய்யக் கூடிய வசதி உள்ளது) உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 50/5, சங்கிலியன் வீதி, நல்லூர்.
T.P. 021 222 8371. (62828)

## விற்பனைக்கு

ஜெனரேற்றர், மைக்ரோவேவ், Oven, இரும்புக்கட்டில், இரும்பு அலுமாரி, Gas சிலிண்டர்கள், Sony T.V., Amplifier, தகரங்கள், Fridge விற்பனைக்குண்டு. *9/1, பினச்சர் லேன், சுண்டுக்குளி.* 0776403259 (53002)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

ஐஸ் பிறிமா, உயிருடன் புறொயிலர், கல்பேட்ஸ், ஊர்ச்சேவல், விறாத்துக் குஞ்சுகள் என்பன சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்பு: மல்ரி பாம் சென்றர்,**
61.இராமநாதன்வீதி,கலட்டி, யாழ்ப்பாணம்.
கிளை: மல்ரி பாம், சுவாமியார் வீதி, பாசையூர் அந்தோனியார் கோயில் முன்பாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
(62816)

## இறைச்சிக்கோழி

உயிர்க்கோழி, புறொயிலர், கல்பேட், விறாத்துச் சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. (சுத்தம் செய்தல் இலவசம்).
1. NEW R.S.K. FARM, *மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.*
2. சோபிதா எலெக்ரோனிக்ஸ், K.K.S. *றோட், கன்னாகம்.*

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். **நல்லூர் பாம் சென்றர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.** (62127)

## TAFE உழவு இயந்திர விற்பனை

வாகன எண் NP RA-1522
(ஆண்டு-2005)

மேலதிக விபரங்களுக்கு எமது யாழ் நகர் கிளையுடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி : 021-2228031

PLC பீபல்ஸ் லீசிங் கம்பனி
பீபல்ஸ் லீசிங் கம்பனி லிமிறட்


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 - 04 - 1953



மறைவு 23 - 07 - 2003

### அமரர் சிற்றம்பலம் ராதாகாந்தி

ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தது
அழிவில்லை இங்கு நாம்
வேண்டிடுவோம் அடைக நீர் சாந்தி என்றும்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரது நினைவாக இன்று (22-07-2007) ஞாயிற்றுக்கிழமை முதலி அம்மன் கோயிலில் நடைபெறும் அன்னதான நிகழ்வில் கலந்துகொள்ளும்படி வேண்டுகிறோம்.

புலோலி கிழக்கு,
புலோலி. (62783)
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### பஞ்சலிங்கம் பரமநாதன் (வஞ்சி)

**(முன்னாள் கமத்தொழில் உத்தியோகத்தர், ஊரெழு)**

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் கனடாவை தற்போது வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சலிங்கம் பரமநாதன் அவர்கள் 18.07.2007 அன்று கனடா ரொரன்ரோவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பஞ்சலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் இரண்டாவது புதல்வனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சேந்தன், பரணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மநாதன் (ராசா), பரமானந்தன் (கண்ணன்), பகீரதன் (முத்து), பத்மராணி, பத்மலோசினி, பத்மினிதேவி, பத்மறஞ்சினி, பவானி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (23.07.2007) திங்கட்கிழமை ரொரன்ரோவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த.தபாகுணம் (மைத்துனர்)
ஊரெழு.

(62823)

### திருமதி சறோஜா கந்தசாமி

**(இளைப்பாறிய ஆசிரியர்)**

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சறோஜா கந்தசாமி நேற்று (21.07.2007) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான திரு.திருமதி ரட்ணசபாபதியின் அன்பு மகளும் கந்தசாமியின் மனைவியும் சகுந்தலா (சுவிஸ்), சஜித் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானசேகரம் (சுவிஸ்), பவா (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (21.07.2007) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*துரை விலா,*
*உடுவில்.* (62830)
*தகவல்:*
பா.கந்தசாமி

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
### பரமேஸ்வரி வல்லிபுரம்

மலர்வு 07-04-1928 உதிர்வு 22-06-2007

அன்னைக்கோர் இலக்கணமாய் வாழ்ந்தவரே
எம்மை அன்புடன் அரவணைத்து
வளர்த்தெடுத்தவரே
எம் உயர்வுக்காய் மெழுகாய் உருகியவரே
வாழ்நாள் உள்ளவரை மறவோம் உம்மை

எமது குடும்பத்தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு எமது துயரத்தை பகிர்ந்து கொண்டோருக்கும் பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (22.07.2007) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நந்தாவில் அம்மன் கோயிலடி,
கோயில் வீதி, கொக்குவில். (62741)
குடும்பத்தினர்.


## MEDICAL DEGREE



SPOT அனுமதிகள்
கலாநிதி- மருத்துவம் -MD
ஆங்கில மூலம்.

இலங்கை மருத்துவசபையின் அங்கீகாரம் பெற்றது.

Conducted by : **Prof. Yuri Alekseenko** M.D., Ph.D.
Head of Foreign student admission & Neurology neurosurgery
VITEBSK STATE MEDICAL UNIVERSITY (BELARUS)

**Seminar & Spot admissions network :**
COLOMBO - PATHE Academy 22nd July @ 10.00 a.m.
MAWANELLA - Baduriya Central Collage 23rd July @ 11.00 a.m
TRINCOMALLEE - Chamber of Commerce 24th July @ 09.00 a.m
KANDY - Hotel Suisse 25th July @ 09.00 a.m
COLOMBO - PATHE Academy 29th July @ 10.00 a.m.

தொடர்புகொள்க. 0773017883.

Apply with pending results / VISA guaranteed

Engineering | IT | Other courses also available
**Register Today, Fly Immediately!**

PATHE ACADEMY
Overseas Student Placement Department
37, School Lane(Entrance from Duplication Rd) Colombo 03.
Tel: 2377752, 2502012, 2591271 www.patheacademy.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து சிறுகதை மூலவர்களில் - மூவர்களில் - ஒருவர் இலங்கையர்கோன். இவரது இயற்பெயர் சிவஞானசுந்தரம். அக்காலத்தில் உயர்ந்த அரச உத்தியோகமாகக் கருதப்பட்ட காரியாதிகாரியாகப் (D.R.O) பணியாற்றியவர். சட்டக் கல்லூரியில் பயின்று வழக்கறிஞராகவும் திகழ்ந்தார்.



முதலில் - தமது 18ஆவது வயதில் - ஈழகேசரியில் சிறுகதைகளை எழுத ஆரம்பித்த அவர், தமிழகத்துச் சஞ்சிகைகளான கலைமகள், மணிக்கொடி, சரஸ்வதி ஆகியவற்றிலும் பல சிறுகதைகளை எழுதினார். பிறமொழிச் சிறுகதைகளையும் தமிழில் தந்தவர்.

அத்தோடு, பல நாடகங்களையும் "லண்டன் கந்தையா" போன்ற பெயர்பெற்ற வானொலி நாடகங்களையும் எழுதியவர்.

வெள்ளிப்பாதசரம், சக்கரவாகம், யாழ்ப்பாடி ஆகியன அவரின் சிறந்த சிறுகதைகளில் சில. மிடுக்கான எழுத்தும் உள்ளார்ந்த கருத்தும் கொண்ட அவரது சிறுகதைகள் வாசிக்கத் தூண்டுவன.

மூத்த எழுத்தாளர்களை இன்றைய சந்ததியினருக்கு அறிமுகப்படுத்தும் வரிசையில் இன்று "வெள்ளிப்பாதசரம்" இங்கே பிரசுரமாகிறது. நாற்பதுகளின் யாழ்ப்பாணத்து வாழ்க்கையைப் பார்க்க வைக்கிறது வெள்ளிப்பாதசரம்.

# வெள்ளிப்பாதசரம்

தன் வீட்டுக்கு ஒரு அடுக்குப் பெட்டியும், தனக்கு ஒரு தையற் பெட்டியும் வாங்கவேண்டும் என்று நினைத்து வந்தவளுடைய உள்ளம் விம்மும்படி கோவில் வீதியெல்லாம் பெட்டிகளும், கடகங்களும் மலைமலையாய்க் குவிந்திருந்தன. குஞ்சுப்பெட்டி, அடுக்குப்பெட்டி, தையற்பெட்டி, மூடற்பெட்டி, பின்னற்பெட்டி ...... ஊ! எத்தனை வகை! அருகில் மாட்டை அவிழ்த்து அதன் வாயில் பொங்கிய நுரையை வழித்து அதன் மினுமினுக்கும் கரிய முதுகில் தேய்ப்பதில் கண்ணுங் கருத்துமாய் நின்ற தன் கணவனின் கையில் மெதுவாக நுள்ளி, "மாடு தன்பாட்டுக்கு நிற்கட்டும் வாருங்கோ!" என்று கெஞ்சினாள்.

அஸ்தமிக்கும் சூரியனின் கடைசிக் கிரணங்கள் பனைமரங்களின் தலையை இன்னும் தடவிக்கொண்டிருந்தன. கிழக்கு அடிவானத்தில் சந்திரன் வெளுக்க ஆரம்பித்தான். அன்று வல்லிபுரக் கோயில்கடைசித்திருவிழா. "எவ்வளவுசனம்பாத்தியளே! இதுக்காலை எப்படிப் போறது?" என்று சொல்லிக் கொண்டே நல்லம்மா தன் கணவனின் அருகில் ஒதுங்கினாள். செல்லையா தன் தோளில் கிடந்த சால்வையை எடுத்து இடுப்பில் வரிந்துகட்டிக்கொண்டு, "பயப்படாமல் என்னோடை வா" என்று தன் மனைவியின் கையைப் பற்றினான்.

கோவில் வீதிகளிலும், கடைகளில் காணப்பட்டதெல்லாம் நல்லம்மாவின் மனதில் ஒரு குதூகலத்தை உண்டாக்கின: வாய் ஓயாது தன் கணவனுக்கு ஏதோ சொல்லிக்கொண்டே சென்றாள். ஐந்து வயதுச்சிறுமியைப் போல, முழங்கால்கள் தெரியும் படி, தன் ஆடையைத்தூக்கிப்பிடித்துக் கொண்டு வீதியைச்சுற்றி ஒரு கெந்தல் போடவேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது....... செல்லையா மௌனமாகத் தன் மனைவியின் குதூகலத்தில் மெய்மறந்து அவள் இழுத்த வழியெல்லாம் போய்க் கொண்டிருந்தான்.

யாழ்ப்பாணத்தின் நீர் வளமற்ற சொற்ப நிலத்தைத் தம் தளராத முயற்சி ஒன்றினாலேயே வளப்படுத்திச் சீவியம் நடத்தும் புதல்வர்களில் அவனும் ஒருவன். இரக்க மற்ற பூமியுடன் தினசரி நடத்தும் போரினால் அவனுடைய தசைநார்கள் முறுக்கடைந்து வச்சிரம்போல் இருந்தன. மன ஒருமைப்பாட்டினால் வாய் மௌனமாகவே இருந் தது.

மூன்று மாதங்களுக்கு முன்புதான் அவன் தன் வாழ்க்கைத் துணையைத் தேடிக் கொண்டான். இவளுடைய கலகலத்த வாயும், விடையில்லா ஒரு கேள்வியைக் கேட்பது போல அவனுடைய பார்வையை முறித்து நோக்கும் அவளுடைய விழிகளும், மார்பின் பாரம் தாங்கமாட்டாதது போல் ஒசியும் நூலிடையும் நிர்மலமாக இருந்த அவனுடைய தனிமை வாழ்வில் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கின. சதா மண்ணைக் கிண்டுபவனுக்கு மண்ணிற்குள் எத்தனையோ ரகஸ்யங்களும், மணங்களும், புதுமைகளும் மறைந்திருக்கும். ஆனால் அவைகளை விட மேலான ரகசியங்களும் மணங்களும் புதுமைகளும் வாழ்க்கையில் எத்தனை மறைந்து கிடக்கின்றன. ஓ! வாழ்வு எவ்வளவு அற்புதமானது! செல்லையா இன்று அணிந்திருக்கும் நாற்பது ரூபா பெறுமதியுள்ள மாறுகரைச்சால்வையைவிட இதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்.

கோவிலிலுள்ள சனங்கள் தங்கள் இஷ்டப்படி கூக்குரலிட்டுக் கொண்டிருந்தனர். மூலைகளில் கிடத்தப்பட்டிருந்த கைக்குழந்தைகள் அழுதன. பஞ்சகச்சம் அணிந்த பூசகர்கள் அங்குமிங்கும் ஓடினர். இந்த ஆரவாரங்களுக்கிடையில் கர்ப்பக்கிருகத்தில் மணிச் சத்தம் கேட்டது. கூப்பிய கைகள் தலைகளுக்கு மேல் உயர்ந்தன. செல்லையா ஒரு தூண் அருகே கைகளைக் கட்டியபடி சனங்களின் தலைகளைப் பார்த்துக்கொண்டு நின்றான். நல்லம்மா அவனருகில் கைக்கூப்பியபடி மூலஸ்தானத்தை ஒருதரம் பார்ப்பதற்காக அங்கும் இங்கும் தலையை அசைத்தாள். எங்கோ தொலைவில் இருளில் சில தீபங்கள் மின்னின. அவைகளின் அருகில் ஒரு தொந்தி பெருத்த பூசகரின் கரும் பட உருவம் கைகளை அசைத்துக் கொண்டு நிற்பது தெரிந்தது. அதற்குப் பின்னால் அதுதானோ வல்லிபுரப் பெருமாள்?

திருமாலின் திருமண பிரசாதத்தைப் பெறு வதற்கு ஆரவாரப்பட்ட சனங்கள் ஒரு பக்கத்தில் மேளச்சமா ஆரம்பமாகவே அவ்விடம் நோக்கி நகர்ந்தனர்.

செல்லையாவும் நல்லம்மாவும் கோயிலை வலம்வந்து வணங்கினர்.

தவிற்காரன் தாளவரிசைகளை மெய்மறந்து பொழிந்து கொண்டிருந்தான். அவனுடைய குடுமி அவிழ்ந்த தலையோடு வேறும் ஆயிரந் தலைகள் அசைந்தன. நல்லம்மாவுக்குச் சிரிப்பாகவிருந்தது. தன் கணவனின் உடலோடு தன் உடலை உராய்த்துக்கொண்டு, "எல்லாருக்கும் பைத்தியம் பாருங்கோ" என்றாள். மௌனியான செல்லையா மௌனம் கலைந்து, "போதும் இனி, வாணை, வெளியால போவம்" என்றான்.

வெளிவீதிகளிலும் தெருக்களிலும் சனசமுத்திரம் அலைமோதிப் புரண்டது. முத்தையும் வைரத்தையும் பொடியாக்கிச்சிதறிவிட்டது போன்ற அந்த அகன்ற வெண்மணற் பரப்பிலே, கன்னித் தாயின் உள்ளத்திலே அன்புவெள்ளம் பாய்வது போல நிலவு வெள்ளத்தை அள்ளிப் பெருக்கும் முழுச்சந்திரனின் கீழ் இரண்டொரு இரவுகளுக்கு வாழ்க்கைப் போரினால் ஏற்பட்ட அலுப்பைக் கொஞ்சம் தீர்த்துக் கொள்வதற்காக யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் வந்து மனிதர்கள் நிரம்பியிருந்தனர்.

சர்பத் கடைக்காரன் பல வர்ணங்கள் கொண்ட போத்தல்களை ஒரு தடியால் அடித்து ஜலதரங்கம் வாசித்தான். மினுக்கு மினுக்கு என்று எரியும் ஒரு கைவிளக்கின் அருகில் உட்கார்ந்து, பொலிஸ்காரர்களின் காக்கியுடுப்பு எங்காவது தெரிகிறதா என்று கடைக் கண்ணால் பார்த்த படி, 'ஒண்டுக்கு நாலு'க் காரன், "ஓடி வா ஓடி வா- போனால் கட லைக்காசு, வந்தால் தேத்தண்ணிக்காசு" என்று ஓலமிட்டான்.

நல்லம்மாவும் செல்லையாவும் தம்மை அறியாமலே ஒரு வளையற் கடையின் முன்னால் போய் நின்றனர். விளக்கொளியில் சுடர்விடும் கண்ணாடி வளையல்களின் லாவண்யத்தில் நல்லம்மாவின் மனம் லயித்தது. செல்லையா அவளுக்கு ஐந்து ஜதை வளையல்கள் வாங்கிக்கொடுத்தான். ஒரு கண்ணாடிப் பெட்டியில் அழகாக வளைத்து வைக்கப்பட்டிருந்த புதுமாதிரியான ஒரு பாதசரம் செல்லையாவின் கண்களை ஈர்த்தது. நெருக்கமாகப் பின்னப்பட்ட வெள்ளி வளையம் ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொரு வெள்ளிக்குண்டும் வேல் போன்ற ஒரு தகடும் தொங்கிக் கொண்டிருந்தன. முகப்பில் சிங்கமும் அது போன்ற ஒரு பாதசரம் அவன் முன் ஒருபோதும் பார்த்ததில்லை... அவன் தன் மனைவியின் முகத்தைப் பார்த்தான்.

குவளை மலரைப் பழித்த அவளது விழிகள் 'காஸ்லைட்' ஒளியில் அகல விரிந்து பளபளத்தன.

அவளிடம் சாதாரணமான காற்சங்கிலி கூட இல்லை. உருண்டையாகவும், வழ வழப்பாகவும் இருந்த அவளுடைய கணைக்கால்களில் இதுபோன்ற ஒரு பாதசரத்தை அணிந்து பார்க்க வேண் டும் என்ற ஆசை செல்லையாவின் மனதில் தோன்றியது. இந்த ஆசையோடு வேறு எத்தனையோ ரகஸ்யமான இன்ப நினைவுகள் அவன் உள்ளத்தை மயக்கின... அதை எப்படியும் வாங்கி விடவேண்டும்! அதன் விலை என்னவென்று கடைக்காரனைக் கேட்டான்.

"முப்பத்தைந்து ரூபாய்: வேறு விலை கேட்க வேண்டாம்." செல்லையாவின் மடியில் முப்பத்தொரு ரூபாய்தான் இருந்தது.

இருபத்தைந்து தரலாம். சாமானைக் குடுத்துப்போடு".

"தம்பி! இது நாட்டுப் பெண்டுகள் போடுகின்ற கால்சங்கிலிகள் அல்ல. ராசாத்தியின் கால்களுக்கேற்றது. இந்தியாவிலிருந்து ஸ்பெஷலாய் வந்தது. உமக்கு இது சரிவராது ராசா. கடைசி விலை முப்பது ரூபாய், குடுப்பீரா?".

"சரி இந்தா....."

பாதசரங்கள் கைமாறி, அவ்விடத்திலேயே நல்லம்மாவின் பாதங்களில் ஏறின.

வெண்மணலில் கால்கள் புதைய இருவரும் மறுபடி கடைகளைச் சுற்றி வந்தனர். மிச்சமாக இருந்த ஒரு ரூபாவைக் கொண்டு ஒரு தையற் பெட்டியும் வாங்கி, ஆளுக்கொரு சர்பத்தும் குடித்தனர். அடுக்குப்பெட்டி வாங்கவில்லை.

நல்லம்மாவின் கால்கள் ஓய்ந்து போயின. 'இனி வண்டியில் போய்க் கொஞ்சநேரம் இருந்திட்டு, திருவிழாப் பார்த்துக்கொண்டு விடியப் போவம்' என்று இருவரும் முடிவு செய்தனர். செல்லையா அவளை ஒரு சனக் கும்பலுக்கூடாகக் கையில் பிடித்து நடத்திச் சென்றான். கும்பல் கொஞ்சம் வெளியான இடத்துக்கு வந்ததும் நல்லம்மா திடீரென்று நின்று, தன் இடக்காலை உயர்த்திக் கையால் தடவிப் பார்த்தாள்.

"ஐயோ! காற்சங்கிலியைக் காணேல்லை....."

"என்ன..... வடிவாய்ப் பார்!"

"ஒரு காலான் எங்கையோ மணலுக்குள்ளை கழண்டு விழுந்திட்டுது"

"கொஞ்சம் கவனமாய் வாறதுக்கென்ன? உனக்கு ஆட்டம் ஓமத்திப் போச்சு. ஊதாரி நாய்!"

மறுகணம் செல்லையா நாக்கைக் கடித்துக்கொண்டான்.

குண்டூசியால் துளைக்கப்பட்ட றப்பர் பலூனைப் போல நல்லம்மாவின் உற்சாகம் அப்படியே சப்பளிந்து போய்விட்டது. மூன்று மாத மணவாழ்க்கையில் இதுதான் முதல் தடவையாக இப்படி ஏச்சுக் கேட்கவேண்டி வந்தது. அதுவும் அம்பலத்தில் கூட்டிக் கொண்டு வந்துவிட்டு...! அவள் மனதில் கோவம், அவமானம், துயரம் ஆகிய எல்லா உணர்ச்சிகளும் ஒருங்கே தோன்றின. கண்களில் நீர் மல்கியது.

"போதும், உங்களோடை கோயிலுக்கு வந்த வண்டவாளம். இனி நடையைக் கட்டுவம்"

செல்லையா ஒரு படி கீழே இறங்கினான். "நல்லம்மா ஆத்திரத்திலை சொல்லிப்போட்டன். இஞ்சை பார்...."

"வேண்டாம், இப்பவே போகவேணும். வண்டிலைக் கட்டுங்கோ. நீங்கள் வராட்டி நான் தனியாக் கால்நடையாய்ப் போறன். வழியில்லை காறுக்குள்ளை வசுவுக்குள்ளை ஆப்பிட்டு நெரிஞ்சு போறன்"

செல்லையா மறுவார்த்தை பேசாமல் தன் திருக்கல் வண்டியை இழுத்து மாட்டை அவிழ்த்துப் பூட்டினான். அவன் ஆண்மகன்.

மாட்டின் கழுத்தில் கட்டியிருந்த வெண்டயங்களின் தாளத்திற்கு ஏற்பக் கரடுமுரடான தெருவில் வண்டிச் சக்கரங்கள் 'கடக் கடக்' என்று சப்தம் செய்தன. யாரோ மணமகன் ஊர்வலம் வருவதற்காக விரித்து விட்ட நிலபாவாடை போல் வளைந்து கிடந்த தெருவின் இரு மருங்கிலும் நெடிய பனைமரங்கள் மௌனப் பூதங்கள் போல் வரிசையாக நின்று ஆலவட்டம் பிடித்தன.

(சிறுகதையின் மிகுதியை நாளைய உதயனில் வாசியுங்கள்)

# உங்கள் இராசிக்கு இந்த வாரத்துப் பலன்

(22.07.2007–28.07.2007 வரையுள்ள)

சோதிடர் சண்

## மேடம்

உங்களுக்கு இந்தவாரம் 4ஆம் வீட்டில் நின்ற சனியுடன் சூரியனும் சேர்ந்தபடியால் பூமி, வீடு, வாகனம் போன்றவற்றால் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு. மாணவர்களுக்கு கல்விக் குழப்பமும் வியாபாரிகளுக்கு, லாபநட்டம் சமநிலையைத் தரவும் குடும்பஸ்தர்களுக்கு குடும்ப சுகம் கிடைக்கவும் பலன் உண்டு. 8இல் குரு நின்று பணச்செலவையும் எதிர்பார்த்த பண வரவுகள் தடைப்படவும் பலன் உண்டு. மற்றும் வாகன விபத்துகள் ஏற்படாது அவதானம் பேண வேண்டிய வாரமாகும்.

## இடபம்

உங்களுக்கு இந்தவாரம் குருவும் சந்திரனும் ஒரு நேர்கோட்டிலிருந்து குருசந்திர யோகமாக இருப்பது குடும்பசுகம் தரும் வாரமாக இருந்தாலும், ஆடி பிறந்தபடியால் சகோதர பகை, சகோதரங்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் மற் றும் வேலையாள்களால் பிரச்சினைகள் தோன்றக் கூடிய பலனைத் தருவதுடன், காதுடன் கூடிய வருத்தமும் சிகிச்சையும் பெறக்கூடிய வாரமாகும். குடும்பஸ்தர்களுக்கு இனிமை தரும். குடும்ப வாழ்க்கையாக இருந்தாலும் தொழில் அதிபர்கள் மற்றும் ஆள் வைத்து தொழில் செய்பவர்களுக்கு தொழில் செய்யுமிடத்தில் உபத்திரம் தரும் வாரமாகும்.

## மிதுனம்

உங்களுக்கு இந்தவாரம் ஓர் ஆணுடைய வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் நிற்பதுபோல இரா சிக்குரியவர் ஆணானால் பெண்ணினால் பெருமை பெறவும் பெண்ணானால் ஆணினால் பெருமை பெறவும் குடும்ப உறவு வெற்றி தரும் வாரமாகும். மேலும் காது, கழுத்து சம்பந்தப்பட்ட சிகிச்சை பெற அல்லது பல்லுடன் சிகிச்சை பெறவும் பலன் உண்டு. மற்றும் பண வரவு தடைப்படும். உத்தி யோகஸ்தர்களுக்கு தொழில் கஸ்ரம் வந்து தீரும்.

## கடகம்

உங்களுக்கு சூரியன், சனி, சந்திரன் சேர்க்கையாக இருக்க செவ்வாய் பார்வையால் யுத்தக் கிரகங்களுடைய சேர்க்கையால் விபத்து, இரத்தக்காயம் ஏற்படுதல், தாய் வழித் துக்கம், தொழில் கேடு, [illegible] கெடக்கூடிய சுகமீனங்கள் இப்படியான [illegible] ஒன்றை சந்திக்க நேரிடும். ஆனாலும் குருபார்வையால் மயிரிழையில் சம்பவங்கள் பெரிதாகிவிடாது சாந்தி யடையவும் பலன் உண்டு. இந்த ராசியில் பிறந்தவர்கள் கடல்பிரயாணம் மற்றும் நீர் நிலைகளில் புழங்குவதைத் தவிர்க்கவும்.

## சிங்கம்

உங்களுக்கு இந்தவாரம் தலைக்கு வேதனை தரும் சம்பவங்கள் ஏற்பட அல்லது யோசனை, தலைக்காயம் ஏற்பட வாய்ப்புண்டு. எது எப்படியாயினும் குரு 5இல் நிற்பது பாவவிமோசனமாகும். இதனால் துன்பம், துயர் ஏற்பட்டாலும் பாதிப்பைத் தராது. தானாக விலகிவிடும். மேலும் இந்த இராசிக்குரியவர்களுக்கு தொழில்நிலை மந்தமாக அமையும். வெளிநாடுகளிலிருந்து வரவேண்டிய அல்லது வெளியூரில் இருந்து வரவேண்டிய பணம் தடைப்படும். தாய்வழி உறவு நன்மை தராது. மாணவர்களுக்கு கல்விக்குரிய வாரமாகும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர். தலை தப்பியது தம்பிரான் புண்ணிய மென குருபார்வையால் குறை தீரும்.

## கன்னி

உங்களுக்கு இந்தவாரம் 11இல் சனி, சூரியன் இருக்க அதை செவ்வாய் பார்ப்பதால் நட்டமடையும் நிலை தொழிலால் வரும். மூத்த சகோதரப் பகை, பண இழப்பு ஏற்படும். பிர யாண ரீதியான ஏமாற்றம், தடை ஏற்படும். மேலும் திருமண ஏற்பாடுகள் அல்லது சம்மந்தக் கலப்புகள் குழப்பத்தைத் தரும். நிச்சயிக்கப்பட்ட திருமணம் பணம் அல்லது சீதனம் போன்றவற்றால் தடைப்படும். மற்றும் 8இல் செவ்வாயிருக்க அதை சனி பார்ப்பதும் கடல் கடந்த நாடுகளிருந்து வரும் செய்திகள் மனக்குழப்பத்தையும் தரும்.

## துலாம்

உங்களுக்கு இந்தவாரம் குடும்ப உறவுகள் மேம்படும், தொழில்நிலையில் பிரச்சினைகள் தோன்றும். உத்தியோகஸ்தர் மற்றும் தொழிலாளர்களுக்கு செய்காரியத் தடை மற்றும் பணச் செலவும் ஏற்படும். வியாபாரிகளுக்கு தொழில் நஷ்டம் ஏற்பட இடமுண்டு. ஆதனம், கடை, கட்டடம் சம்பந்தமான பிணக்குகள் ஏற்பட்டு அதனால் வேண்டப்படாத பகையை சம்பாதிக்க சந்தர்ப்பம் இருப்பதால் எதிலும் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## விருச்சிகம்

உங்களுக்கு இந்த வாரம் பாக்கியஸ்தானம் என்று சொல்லக்கூடிய 9ஆம் வீடான கடக ராசியில் சனி, சூரியன் சேர்க்கையும் செவ்வாய் பார்வையும் சத்துருவை துவேசம் செய்யும் வாரமாகும். இதனால் பண இழப்பு அல்லது சொத்திழப்பு ஏற்படுவதுடன் பண விடயமாக அடி, பிடி சண்டையில் ஈடுபடவும் அதனால் கஷ்டப்படவும் பலன் உண்டு. மேலும் கடல்வழிப் பிரயாணம் பணச்செலவைத் தரும். கீழ் சகோதர பகையும் இனசன விரோதமும் தரும். ஆனாலும் குருவும் சந்திரனும் ஒரே நேர் கோட்டிலிருப்பது குடும்பஸ்தர்களுக்கு குதூகலமான வாரமாகும்.

## தனுசு

உங்களுக்கு இந்த வாரம் அட்டமத்தில் சனி, சூரியன் இருக்க செவ்வாய் பார்ப்பது மயிரிழையில் உயிர் காக்கும் சம்பவத்தை சந்திக்கவேண்டிய வாரமாகும். மேலும் வயிற்றில் சுகயீனமும் சிகிச்சையும் ஏற்படுவதுடன் வாகன [illegible] மிக அவதானம் பேணவேண்டிய வாரமாகும். ஆட்சி பெற்ற புதனுடைய பலன் தொழில் நிலையில் நன்மை தரும்.

## மகரம்

உங்களுக்கு இந்தவாரம் களஸ்திரம் என்று சொல்லப்படும் குடும்ப ஸ்தானத்தில் சனி, சூரியன் சேர்க்கை குடும்ப உறவில் விரிசலைத் தரும். முக்கியமாக கணவன், மனைவி என்ற உறவு நிலை பாதிக்கப்படும். தோல்வியைத் தரக்கூடிய சம்பவங்கள் மற்றும் சிநேகிதர், உறவினர்களால் பகையும் பணச்செலவும் ஏற்படும். வியாழ பகவானுடைய பார்வை ஓரளவு சாந்தியைத் தரும். குடும்பஸ்தர்களுக்கு இருட்டடிக்கப்பட்ட வாரமாகும். 11ஆம் இடத்தில் குரு நிற்பதால் எதிர்நீச்சல் போட்டு கருமங்களை வென்றெடுப்பீர்கள்.

## கும்பம்

உங்களுக்கு இந்தவாரம் சஞ்சலம் தரக் கூடிய வாரமாகும். சண்டையும் சரீர வருத்தமும் நீர்நிலைகளில் விபத்தும் நீதிமன்றங்களால் வரக் கூடிய தீர்ப்புகளால் சிறைவாசமும் இப்படி ஏதாவது பலனைத் தரக்கூடிய நிலைக்குத் தள்ளப்படுவதுடன் வேண்டப்படாதவரர்கள் அல்லது சத்துருக்களால் துன்படக்கூடிய பலன் ஏற்படுதல் மேற் சொல்லிய வீண்வம்புகளில் மாட்டிக்கொள்ளாது தவிர்க்கவேண்டிய வாரமாகும். வீண் இடமாற்றமும் அலைச்சலும் தொழிலால் மந்தமான பலனும் தர இடமுண்டு.

## மீனம்

உங்களுக்கு இந்தவாரம் பணவரவுண்டு. சந்திரனை குருநோக்குவது லட்சுமிகரம், குடும்பச் சிறப்பு மற்றும் மாணவர்களுக்கு கல்வியால் நற்பலனும் உத்தியோகதஸ்தர், குடும்பஸ்தர்களுக்கு நன்மை தரும் வாரமாக இருப்பதுடன் தாய்வழி உறவு, சந்தோஷம் தரக்கூடிய செய்திகள் வந்துசேரும். 5இல் சனி, சூரியன் இருக்க செவ்வாய், குரு பார்ப்பது வயிற்றில் ஏற்படக்கூடிய சுகயீனங்கள் மற்றும் இருதயத்துடன் கூடிய சுகயீனங்களும் சிகிச்சையும் சிலருக்கு ஏற்படக்கூடிய நிலை தவிர்க்கமுடியாதது. எப்படியாயினும் குரு பார்வை குறைதீர்க்கும். பொதுவாக இந்த வாரம் சுகம் தரும் வாரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரெய்கி யோகா வைத்தியம்
(இயற்கை வைத்தியம்)

* கை, கால், தலை விறைப்பு
* வாதம் மூட்டுவலி, தசைப்பிடிப்பு
* மூட்டுக்கள் தேய்மானம், இடுப்பு வலி
* நீண்டநாள் தலையிடி, நித்திரை இல்லாமை
* கைகால் நடுக்கம், கழுத்துப்பிடிப்பு
* சிக்குன்குனியா வீக்கம், வலி

மற்றும் பழைய நோக்கள் உள்ள பல நூற்றுக்கணக்கானோர் எமது சிகிச்சையால் குணமடைந்துள்ளனர். மருந்துகள் பலனளிக்காதவர்களும் நேரில் தொடர்புகொள்ளலாம்.


**யோகா மருத்துவம்**
சாரையடி, பருத்தித்துறை.

(62788)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## செ.சின்னரத்தினம்



(இளைப்பாறிய அதிபர்,
காட்டுவளவு, வல்வெட்டித்துறை)

மண்ணுலகம் 19-11-1927

விண்ணுலகம் 02-08-2006

திதி: 22.07.2007

நெஞ்சைவிட்டகலா வேதனை நிறைந்த
இந்நாளில்
ஈரவிழிகளுடன் உங்களை நினைவு கூர்ந்து
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

(62792)

காட்டுவளவு,
வல்வெட்டித்துறை.

**பிள்ளைகள்.**


**காணி விற்பனைக்கு**

மயிலணி, சுன்னாகம் முருகமூர்த்தி கோயில் வடக்கு வீதிக்கு அருகில் பிரதான ஒழுங்கையில் பயன்தரு மரங்களுடனும் தனிக்கிணறும் உள்ள 2½ பரப்பு சதுரக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
திருமதி கி.புவனராணி,
புகையிரத வீதி,
மல்லாகம்.

(சி/52984)

**மணமகன் தேவை**

இந்துகௌரவ குடும்ப அரச உத்தியோகம் (ஆசிரியர்) பார்க்கும், 1963.01.16 இல் பிறந்த, 7இல் செவ்வாய், கிரக பாவம் 64 உள்ள, அத்தம் முதலாம் பாதம் நட்சத்திரமுடைய பெண்ணுக்குத் தகுந்த மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர்.

உதயன் மே/பா
2993

(62772)

## பதவி வெற்றிடங்கள்

ஜனசக்திக் காப்புறுதிக் கம்பனியில் பொதுக் காப்புறுதித் துறையில் பின்வரும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

1. பிரதேசப் பிரதிநிதி
2. விற்பனை உத்தியோகத்தர்
3. விற்பனை அபிவிருத்தி மேற்பார்வையாளர்
4. விற்பனை அபிவிருத்தி உதவியாளர்

விண்ணப்பிப்போர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1. G.C.E. O/L தமிழ், கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தி.
2. G.C.E. A/L
3. பதவி (03), பதவி (04)இற்கு துறை சார்ந்த முன் அனுபவம் விரும்பத்தக்கது.
4. ஆண், பெண் ஆகிய இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

நேர்முகத் தேர்வு, காரியாலயத்தில் July 23, 24, 25ஆம் திகதிகளில் காலை 9 மணிதொடக்கம் 12 மணிவரை நடைபெறும்.

யாழ். மாவட்ட பொதுக்காப்புறுதி பிரிவு
இல.165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 3827 / 9552

JANASHAKTHI INSURANCE

(52773)

## இறைச்சிக் கோழி (உயிர்) விற்பனைக்குண்டு

உயிர் இறைச்சிக் கோழிகள் (Broiler) விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவான விலையில் பின்வரும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| **சிறி விநாயகர் ஸ்ரோர்ஸ்**<br>ஆனைக்கோட்டைச் சந்தி<br>தொ.பே: 077 6138978 | **வீனஸ் பாம்**<br>பலாலி வீதி,<br>திருநெல்வேலி. | **அராலி கோழிப் பண்ணை**<br>அராலி மத்தி,<br>அராலி. |
| **வீனஸ் விற்பனை நிலையம்**<br>அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி<br>தொ.பே: 0776941693 | **ஆதவன் விற்பனை நிலையம்**<br>328, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.<br>தொ.பே: 222 8418 | **நொதேன் விற்பனை நிலையம்**<br>ஆடியபாதம் வீதி,<br>கல்வியங்காடு. |

குறிப்பு: வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

(62607)


நெஞ்சகலா நினைவினிலே...

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## சுகந்தன் தவராசா



முன்னாள் காசாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை

தோற்றம்: 28.05.1978 மறைவு: 13.08.2005

திதி: 22.07.2007

சொல்லும் தரமன்று சுகந்தா உம்
பிரிவின் துன்பம்
அல்லும் பகலும் அப்பா என உம்
அன்புத் திகழ் அழைக்கையில்
ஆற்றுவது எப்படி, ஆறுவது எப்படி,
அவனியில் வாழும்வரை?
ஆண்டுகள் இரண்டு ஆனதோ
ஆறுதில்லை எம் மனசு.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைஞ்சுகின்றோம் இறைவன் பாதம்.

(62790)

பலாலி வீதி,
பிரதேச செயலகம் முன்பாக,
திருநெல்வேலி.

உம் பிரிவால் வாடும்
உற்றார், உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்கல்வி நிலை இங்கு முன்னேறாது இருப்பதால் வீடும், நாடும் இப்போது பெரும் பின்னடைவுக்குள் !

பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை
(Ph.D., Durham)
(முன்னாள் துணைவேந்தர்)



நல்வளர்ச்சி கொண்ட கட்டமைப்புடன் கூடிய முன்பள்ளிக் கல்வி குழந்தை விருத்திக்கும், தரம் ஒன்று கல்வியின் மிருதுவான ஆரம்பத்திற்கும் மிக முக்கியம். எமது நாட்டில் முன்பள்ளிக் கல்வி இன்னும் ஆரம்ப நிலையிலேயே உள்ளது. ஒரு சிலவற்றைத் தவிர பெரும்பாலான முன்பள்ளிகள் தனியாரினால் நடத்தப்படுகின்றன. இந்த முன்பள்ளிகளில் கற்பிக்கும் அதிகமான ஆசிரியர்களுக்கு முறையாய் பயிற்சிகள் வழங்கப்பட்டதாக இல்லை. இவ்வாசிரியர்கள் பெறும் வேதனமும் குறைவாகவுள்ளது. முன்பள்ளிகளின் சிறப்பான, முறையான வளர்ச்சிக்கு அரசு உதவிகளையும் பயிற்சிகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கவேண்டும்.

2 வயது தொடக்கம் 4 வயது வரையுள்ள பாலர்களைக் கொண்டியங்குவன. முறையே குழந்தைகள் பேணும் நிலையம் (2 வயது வரையான குழந்தைகள்), விளையாட்டுப் பள்ளி (2-3 வயது வரையான குழந்தைகள்), முன்பள்ளி (3-4 வயதுப் பிரிவினர்) ஆகியனவாகும்.

குழந்தை விருத்தி, பாலர் கல்வி பற்றிய புதிய கோட்பாடுகள், முன்பள்ளிக் கல்வி முறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு, 4+ வயதுப் பிரிவினரை முறைசார் ஆரம்பக் கல்விப் பிரிவுக்குள் உள்வாங்கி வரவேற்பு வகுப்பில் Reception Class அனுமதிக்கலாம் என்ற ஆலோசனை இப்போது முன்வைக்கப்படுகின்றது. பாடசாலைக் கல்விக் காலம் 13 ஆண்டுகளிலிருந்து 12 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டன. இடைநிலைக்கல்வி ஆண்டுகள் அதனால் மீதப்படும். 6இல் இருந்து 5 ஆகும் போது வளங்கள் யாவும் இவ்வரவேற்பு வகுப்பின் உருவாக்கத்திற்கும் செயற்பாட்டிற்குப் பயன்படுத்தப்படலாம். இதனால் 4+ வயதுப் பிரிவினரும் அவர்கள் பெற்றோரும் பெரு நன்மை அடைவர்.

யாழ்.மாவட்டத்தில் 708 முன்பள்ளிகள் 1,155 ஆசிரியர்களுடனும் 15,934 மாணவர்களுடனும் உள்ளன.

**சமகாலக் கல்வி நிலை: ஒரு பார்வை 2**

### கால இடைவெளியும் தாமதங்களும்

மேலும், கால இடைவெளிகளும் தாமதங்களும் கல்வி உலகில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளாகும். ஐரோப்பா, வட அமெரிக்கா, இந்தியாவில் எமது நாட்டு க.பொ.த.(உ/த.) பரீட்சைக்கு சமமான பாடசாலைக் கல்வியின் இறுதிப்பரீட்சையை அந்நாடுகளின் மாணவர்கள் 17 வயதில் பூர்த்தி செய்து, பல்கலைக்கழகம் செல்கின்றனர். அவர்கள் தமது முதற்பட்டப்படிப்பை 20 வயதில் பூர்த்தி செய்கின்றனர். பட்டப்பின் படிப்பை 20+ வயதில் ஆரம்பித்து விடுவர். ஆனால் எமது நாட்டில் பல்கலைக்கழகக் கல்வியைத் தொடங்கும் போது ஒருவர் 20 வயதிற்கு மேற்பட்டவராகவும் பட்டப்படிப்பை முடித்து வெளியேறும் போது கிட்டத்தட்ட 25 வயதை அடைந்தவராகவும் இருப்பர். 14 ஆண்டுக்காலப் பாடசாலைக் கல்வியுடன் பல்கலைக்கழக அனுமதியை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடமிருந்து பெறுவதற்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டியும் இருக்கிறது. மேலும் அனுமதி பெற்றோரும் பல்கலைக்கழகக் கல்வியை ஆரம்பிப்பதற்கு சராசரி 01 அல்லது 1½ ஆண்டு காத்திருக்க வேண்டியுள்ளது. நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் யாவும் ஒரே கால அட்டவணையில் செயற்படுவதில்லை.

ஒரே பல்கலைக்கழகத்திற்குள் உள்ளேயே வெவ்வேறு பீடங்கள் வெவ்வேறு கால அட்டவணையைக் கொண்டுள்ளன. பல்கலைக்கழகக் கற்கை நெறிகள் திட்டமிட்ட கால வரையறைக்குள் முடிவுறாது நீண்ட காலம் செல்கின்றன.

இத்தகைய இடைவெளிகளும் தாமதங்களும் இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் இருபது வயதுகளின் முடிவில் அல்லது முப்பது வயதுகளின் ஆரம்பத்திலேயே வேலைக்குச் செல்கின்றனர். இது மனித வள விரயத்தையும் கால விரயத்தையும் ஏற்படுத்துவதுடன் பெற்றோருக்கும் மனச்சுமையைக் கொடுக்கின்றது. எனவே கல்வி கற்கும் காலத்தில் ஏற்படும் இடைவெளிகளையும் தாமதங்களையும் குறைப்பதற்கு, திட்டமிட்ட காலக் கட்டமைப்புக்குள் பரீட்சைச் செயற்பாடுகளும் அனுமதிச் செயற்பாடுகளும் பல்கலைக் கழகக் கல்விச் செயற்பாடுகளும் நடைபெறவேண்டும்.

### பரீட்சைப் பெறுபேறுகள்

எமது நாட்டில் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளை நோக்கின், சித்தி வீதம் மிகக் குறைவாகவே உள்ளது. சராசரியாக 50%க்குக் குறைவாகவே காணப்படுகிறது.

2006 இல் க.பொ.த.(சா/த) பரீட்சையில் தேசிய மட்டச் சித்தி 47.3% ஆகும். பாடங்களுக்கு இடையேயான சித்தி வீதம் பெரும் வேறுபாடுகளைக் கொண்டுள்ளது. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலப் பாடங்களில் சித்தி வீதம் மிகக் குறைவு. முதல்மொழி, சமயம் ஆகிய பாடங்களில் சித்தி வீதம் திருப்தியாக உள்ளது. உயர்தர பரீட்சைப் பெறுபேறுகளும் குறைவாகவே உள்ளன.

பெறுபேறுகளின் குறைவுக்குக் காரணம் என்ன? கற்றல் - கற்பித்தல் - மதிப்பிடல் முறைகளில் ஒன்றுக்கொன்று பொருத்தப்பாடின்மை காணப்படுகின்றதா? அல்லது பரீட்சை முறைகளில் மதிப்பீட்டுப் பண்புகள் குறைந்து போட்டித் தன்மை காரணமாக எண்ணிக்கையைக் குறைக்கும் நிலை மேலோங்குகின்றதா? 11 ஆண்டுகள் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தபின் க.பொ.த.(சா/த) பரீட்சைகளில் சித்தியடையாத 50% மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேற வேண்டியுள்ளது. இந்த நிலைமைக்கும் பிரதான காரணம் கணித பாடத்தில் சித்தியின்மையே ஆகும். க.பொ.த.(சா/த) வகுப்புக்கு முற்பட்ட காலப்பகுதியில் கூட ஏற்படும் மாணவர் இடைவிலகலுக்கு கணிதபாடப் பிரச்சினையும் ஒரு காரணமாக அமைகின்றது.

தமிழ் நாட்டில் SSLC, 12 ஆம் ஆண்டுப் பரீட்சையில் (Plus-2) மாணவர் பெறுபேறுகள் 85%-90% ஆக உள்ளது. மேலும் மீள் பரீட்சைகளும் குறுகியகால இடைவெளியில் நடத்தப்படுகின்றன. இதனால் முதல் முறையில் சித்தி பெறத் தவறிய மாணவர்களும் ஒருசில மாதங்களுக்குள் மீள்பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெறுவோர் கால விரயம் இன்றி ஏனைய மாணவருடன் சேர்த்து மேல் வகுப்பில் படிக்கின்றனர்.

எனவே எமது நாட்டில் பரீட்சைகளும் பரீட்சை முறைகளும் செய்யப்படுவதுடன் 1970களுக்கு முன்னர் நடைபெற்றது போன்று மீள்பரீட்சை நடத்தப்படுவதும் அவசியம்.

### மூன்றாம் நிலைக்கல்வி

எமது நாட்டில் மூன்றாம் நிலைக் கல்வி வாய்ப்புகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டு உள்ளன. சராசரியாக வருடமொன்றுக்கு 250,000 மாணவர்கள் க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள். இவர்களுள் சுமார் 11 லட்சம் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெறுகிறார்கள். 2006 இல் நடத்த க.பொ.த.(உ/த) பரீட்சை அடிப்படையில் 17,000 மாணவர்கள் மாத்திரமே பல்கலைக் கழக அனுமதியைப் பெற்றுள்ளனர். மேலும் சுமார் 8,000 பேர் வரை உயர்தர தொழில் நுட்பக் கல்லூரிகள், கல்விக் கல்லூரிகள், ஆசிரியர் கல்லூரிகள் மற்றும் வேறு உயர்நிலைக் கல்வி நிறுவனங்களில் அனுமதி பெறுவர்.

இந்நிலையில் ஏனையோரின் எதிர்காலம் என்ன?

வளர்ச்சியடைந்த நாடுகள் பலவற்றில் 18 வயதுப்பிரிவினருள் 25-40 வீதமானோர் உயர் கல்வியைப் பெறுகின்றனர். இந்நாடுகள் தமது நாட்டுப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கும் பட்டதாரிகள் போதாது என்ற நிலையில், மேலும் உயர்கல்வியைப் பல நிலைகளில் விரிவாக்குவதற்கு முயற்சி எடுக்கின்றன. அத்துடன் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் இருந்து உயர், தொழில் நுட்பக் கல்வி பெற்ற பெரும் எண்ணிக்கையானோரைத் தம் நாட்டுக்கு வரவழைக்கின்றனர்.

## தனியார் துறையின் பங்களிப்பால் தமிழகத்தில் பெரும் முன்னேற்றம்

வளர்ச்சியடைந்த நாடுகள் மாத்திரமல்லாமல், எமது அயல்நாடான இந்தியாவில் ஏன் தமிழ்நாட்டில் உயர்கல்விச் செயற்பாடுகளை நோக்கின், உயர்கல்வியின் முக்கியத்துவம் உணரப்படும். தமிழ் நாட்டில் 250 பொறியியல் கல்லூரிகள் 65,500இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு அனுமதி வழங்குகின்றன. இக் கல்லூரிகள் யாவும் புகழ்பெற்ற அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைந்த கல்லூரிகளாகும்.

எமது நாட்டில் வருடமொன்றுக்கு 4 பல்கலைக்கழகங்களில் உள்ள பொறியியல் பீடங்களுக்கு 1,100 மாணவர்களே அனுமதி பெறுகின்றனர். அதாவது தமிழ்நாட்டில் சென்னை, மதுரை காமராஜர், கோவைப் பாரதியார், திருச்சி பாரதிதாசன், திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார், சேலம் பெரியார், வேலூர் திருவள்ளுவர், காரைக்குடி அழகப்பா, கோடைக்கானல் அன்னை திரேசா பல்கலைக்கழகங்களுடன் இணைந்த 450 கலை, வர்த்தக, விஞ்ஞான, கல்விக் கல்லூரிகளுக்கு வருடமொன்றிற்கு 3 லட்சம் வரையான மாணவர்கள் அனுமதி பெறுகின்றனர்.

இவை தவிர, மருத்துவம், பல் மருத்துவம், மிருக வைத்தியம், விவசாயம், சட்டம், மனைப் பொருளியல், விளையாட்டு விஞ்ஞானம் போன்ற துறைகளுக்குத் தனித்தனிப் பல்கலைக் கழகங்கள் உள்ளன. இவை தவிர மேலும் பல பல்கலைக் கழகங்கள் இணைந்த கல்லூரிகள் இல்லாது தனித்துச் செயற்படுகின்றன.

தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரப் பிரதேச தகவல் தொழில் நுட்பப் பொறியியல் துறைகளில் ஆயிரக்கணக்கில் பட்டதாரிகளைத் தயாரித்துவிட்டதனால் இன்று சென்னை, பெங்களூர், ஹைதராபாத் நகர்கள் உலகில் தகவல் தொழில் நுட்பத்தில் முன்னணி நிலை பெற்று உள்ளன.

எமது அயல் நாட்டின் உயர் கல்வி நிலை இவ்வாறிருக்கையில், எமது நாடு உயர் கல்வி விரிவாக்கம் பெறாதிருப்பது எமது நாட்டினதும் வீட்டினதும் முன்னேற்றத்திற்குப் பின்னடைவாக உள்ளது.

அரசாங்கம் நிதிநெருக்கடியினாலும் மனித வளப் பற்றாக்குறையாலும் முகாமைத்துவப் பிரச்சினையாலும் மூன்றாம் நிலைக் கல்வியைத் துரித விரிவாக்கம் செய்ய முடியாதுள்ளது. நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலை தனியார் பங்களிப்புக்கு அனுமதி கொடுக்கவில்லை. இந்நிலையில் உயர்கல்வி விரிவாக்கம் முன்னேற்றம் காணாதுள்ளது.

கொழும்பில் ஒரு சில சர்வதேச பல்கலைக் கழகங்கள் இயங்கினாலும், இவற்றின் பங்களிப்பு குறைவு. உயர்கல்வி விரிவாக்கம் துரிதமாக நடைபெறாவிட்டால் ஒருபுறம் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் உயர்கல்விக்காக வெளிநாடு செல்வர். இது நாட்டின் அந்நியச் செலாவணியைப் பாதிக்கும். மறுபுறம் இன்னொரு பிரிவினர் உயர் கல்வி பெற விரும்பும் வசதி வாய்ப்பின்றி விரக்தியுடன் இருப்பர். எனவே உயர்கல்வி விரிவாக்கத்தை இட்டு மக்களின் பங்களிப்பும் அழுத்தமும் தேவைப்படுகின்றன.

### கல்விச்செலவு

இலங்கையில் இலவசக்கல்வி என்று நாம் பெருமைப்படுகிறோம். மேலும் மாணவர்களுக்கு சீருடை, பாடப்புத்தகங்கள், மதிய உணவு, போக்குவரத்து பருவச்சீட்டு, 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் என்பன வழங்கப்படுகின்றன. எனினும் பாடசாலைக் கல்விச் செலவுகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. பாடசாலை அனுமதிக்காக நேரடியாகவோ, மறைமுகமாகவோ நிதி பெறப்படுகிறது. மாணவர்களின் போக்குவரத்துத் தேவையை பாடசாலை பஸ்சேவை முழுமையாக நிறைவேற்ற முடியாத காரணத்தால் தனியார் போக்குவரத்துச் சேவைக்கு வருடம் ரூபா 12,000 இற்கு மேல் செலவிட வேண்டியுள்ளது.

மேலும் இன்று கல்வித்துறையில் நிலவும் கடும் போட்டி காரணமாக பெற்றோர் பிரத்தியேகக் கல்விக்கு அதிக பணத்தைச் செலவிடுகின்றனர். ஆண்டு ஒன்று முதல் 12 வரை 'ரியூசன்' தான்! மாணவர்கள் பாடசாலைக்குச் சென்றாலும் வெளியிலேயே அதிக விலை கொடுத்து கல்வியைப் பெறுகிறார்கள்.

அரசாங்கம் பாடசாலைக் கல்விக்கு ஆண்டு தோறும் பெருந்தொகையான பணத்தை செலவிட்டாலும் பாடவிதானம், கற்றல், கற்பித்தல், மதிப்பிடல், மாணவர் ஆசிரியர் நலன்பேணல், முகாமைத்துவம், நிர்வாகம் ஆகிய துறைகளில் காணப்படும் குறைகள் களையப்படாவிட்டால் உரிய பயனைப்பெறுவது கடினமாகவே இருக்கும். உயர்கல்வி விரிவாக்கம் தாமதமின்றி நடைபெறாவிட்டால் நாட்டு முன்னேற்றமும் தடைப்படும். மக்கள், சிவில்சமூகம், கல்வியாளர்கள், அரசு இணைந்து செயற்பட்டால் முன்னேற்றம் காணலாம். (முற்றும்)

# ஜப்பானின் சந்தை உரிமைக்காக தமிழரின் உயிர்வாழும் உரிமையை பேரம் பேசுகிறார் யசூஷிஅகாஷி



இலங்கையின் சந்தை வாய்ப்பை இழக்க ஜப்பான் விரும்பாமல் இருக்கலாம். அதற்காக இலங்கை செய்யும் மனித உரிமைமீறல்களைக் கண்டும் காணாமலும் போகலாம். ஆனால் வெறும் சந்தை வாய்ப்பு உரிமைக்காக இந் நாட்டு தமிழ் மக்களின் உயிர் வாழும் உரிமையை அந்நாட்டு விசேஷ தூதுவர் பேரம் பேசுவாரானால் அவருக்கு அழகல்ல.

அணுகுண்டின் அகோரத்தை நேரடியாக அனுபவித் தவர்கள் ஜப்பானியர்கள். இலட்சக்கணக்கான உயிர்களை பலிகொடுத்தவர்கள். இரண்டாம் உலகயுத்தத்தின் வடுக்களை இன்னமும் தன்னகத்தே சுமந்து நிற்கும் ஒரு நாட்டின் தூதுவர் இலங்கை தமிழர்களின் உயிர்கள் பணயம் வைக்கப்பட்டுள்ள உரிமைப் போரை உதாசீனம் செய்வாரானால் உலகின் பழிச் சொல்லுக்கு அவரும் ஒருநாள் பலியாவது திண்ணம்.

இலங்கையின் இனப்பிரச்சினையை சமாதான முறையில் பேச்சுவார்த்தை மூலம் பேசித்தீர்க்கவேண்டும் என இணைத் தலைமை நாடுகள் வற்புறுத்தி வருகின்றன. ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், அமெரிக்கா, நோர்வே, ஜப்பான் ஆகியனவே இணைத் தலைமை நாடுகள். இணைத் தலைமை நாடுகளில் ஜப்பான் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாக பணியாற்ற பெரு முயற்சி செய்தது. நோர்வேயை பின்தள்ளி விட்டு அதில் தன்னை உட்புகுத்த அரும்பாடு பட்டது. சரியான நடுநிலையாளனாகத் தன்னைக் காண்பித்தது. இலங்கை அரசு ஜப்பானை அனுசரணைப் பணியில் புகுத்தி நோர்வேயை வெளியேற்றத் துடித்தது.

இத்தகைய இலங்கை அரசின் விருப்பத்துக்குரிய ஜப்பானின் விசேடதூதுவர் யசூசி அகாஷி இலங்கை வந்து அரச தலைவருடன் கலந்துரையாடி பல இடங்களையும் பார்வையிட்டு கொழும்பில் ஊடகவியலாளர் முன்னிலையில் ஓர் அறிக்கையும் வெளியிட்டார். அதில் இலங்கை அரசு மனித உரிமையைப்பேண எடுத்த நடவடிக்கைகளுக்கும் கிழக்கு மாகாணத்தில் மக்கள் மீள்குடியேற்றப் பட்டமைக்கும் [illegible] விப்பதோடு, தொடர்ந்தும் ஜப்பான் இலங்கைக்கு நிதி உதவிசெய்யும் என்று உறுதியும் அளித்தார்.

ஜப்பானின் விசேஷ தூதுவர் நற்சான்றுரை நிகழ்த்திய அன்று இலங்கை அரசு உச்சகட்ட மனித உரிமை மீறலை கொழும்பில் தங்கியிருந்த தமிழ் மக்கள் மீது மேற்கொண்டிருந்தது. உயர்நீதி மன்றமே கண்டிக்கும் அளவுக்கு மனித உரிமை மீறப்பட்டு இருந்தது. இச்சம்பவத்தை உலக நாடுகளும் ஐ.நாவும் கண்டனம் செய்தன. இலங்கையில் அரசாங்கத்தின் பங்காளிகளான ஜே.வி.பி. கூட கண்டனம் செய்தது. ஆனால், ஜப்பான் தூதுவர் மட்டும் பாராட்டுத் தெரிவித்தார். இதில் உள்ள பகிடி என்னவென்றால் - இலங்கை அரசின் பிரதம மந்திரி நான் தமிழ் மக்களின் மனித உரிமையை மீறிய குற்றத்தை ஏற்று பகிரங்கமாக மன்னிப்புக் கோருகின்றேன் என்றார்.

ஜப்பான் விசேட தூதரின் இதுபோன்ற சங்கடநிலை மேலும் தோன்றாது இருக்க ஜப்பான் நடக்குமா?

இந்நாட்டு மக்களுக்கு ஜப்பான் பற்றி [illegible] உழைப்பாளிகளான ஜப்பான் தேசத்தவர்க்கு தமது உற்பத்தியை சந்தைப்படுத்தும் இலங்கை போன்ற சந்தையை இழக்க முடியாது. இலங்கையை இழக்காது இருக்க வேண்டுமானால் இலங்கை கேட்கும் நிதி உதவியைக் கொடுக்கத்தான் வேண்டும். ஜப்பான் தான் கொடுக்கும் நிதி உதவியை மற்றவர்களிடம் கருத்துக் கேட்க வேண்டியதோ கட்டுப்படவேண்டியதோ கிடையாது. தான் விரும்பியவாறு செய்யலாம் அதற்கு உரிமையுண்டு.

ஆனால்...... ஜப்பான் தன் சந்தை உரிமைக்காக இலங்கைத் தமிழரின் மனித

**ஆனந்தன்**

உரிமை பற்றியோ, மொழியுரிமை பற்றியோ, அன்றி அரசுரிமை பற்றியோ பேசுவது அழகில்லை. மக்களின் உயிர்வாழும் உரிமையும் சந்தை உரிமையும் ஒன்றாக்க முடியாது என்பதை ஜப்பான் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படி ஒன்றாக்குவது நியாயமும் இல்லை; தர்மமும் இல்லை. அப்படியே மீண்டும் செய்தால் தெய்வ தண்டனைக்கு உள்ளாவீர்கள். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும்
'அல்டி எலக்ரோனிக்ஸ்' உரிமையாளருமாகிய
**செல்லத்துரை சண்முகதாசன்**
அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகிறோம்.
அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*இல.165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.* (சி-53007) **யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.**

# மரண அறிவித்தல்கள்

## அருணாசலம் கருணாகரன்

வியாபாரி மூலையைப் பிறப்பிடமாகவும் இலண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் கருணாகரன் 19-07-2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுகாதாரப்பரிசோதகர் அருணாசலம்-மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் மலர்விழியின் அருமைக் கணவரும் அபிராமியின் பாசமிகு தந்தையும் அம்புஜம், அருந்ததி, சாவித்திரி, கெங்காதரன், யோகலக்சுமி, தமயந்தி, வைஜெயந்தி, வசந்தி, சாந்தி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23-07-2007) லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*'உதயகிரி' வியாபாரி மூலை, பருத்தித் துறை.* (62826)
தகவல்: **தாய், சகோதரர்கள்.**

## நீக்கிலாப்பிள்ளை மரியம்மா



ஒட்டுகப்புலத்தினைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி, மாதாகோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட ... நீக்கிலாப்பிள்ளை மரியம்மா நேற்று (21-07-2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அன்னரத்தினம் (அச்சுவேலி), ஞானரத்தினம் (கொழும்பு), நேசரத்தினம், வேதநாயகம் (சூறாவத்தை), அரியநாயகம் (ஜேர்மனி), பற்றிமா (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற மர்சலின் நவராசா (அச்சுவேலி), காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை செபமாலை அன்ரன் (நவநாதன்), லவின் (சூறாவத்தை), கெலன் (ஜேர்மனி), மதுரநாயகம் (அரசன்-ஹொலண்ட்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (22-07-2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரவெட்டி சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கரணவாய் கிழக்கு, கரவெட்டி.* (62832)
தகவல்: **பிள்ளைகள்.**

## குறூஸ் விக்ரர்



*(புகைப்படப் பிடிப்பாளர்)*

யாழ்.மாட்டின் றோட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட குறூஸ் விக்ரர் (20-07-2007) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான குறூஸ் றோசம்மாவின் அன்பு மகனும் திரேசாவின் அன்புக் கணவரும் பேபி, பவா, சுட்டிபவா, சுட்டித்தம்பி, தம்பி (டோகா), மாலா, பிரியா, மிலானி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற றோஸ்மலர் மற்றும் வில்பிறட், றீற்றா, மாகிறேட் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அனுஷியா, தங்காபொனிபஸ், கோமஸ் பற்றிக், சியாமிளா, விஜயபாபு, ராஜா ஆகியோரின் அன்பு மாமனும் மாகிறேட், ஜோன்மோசேஸ் ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தர்மலிங்கம், காலஞ்சென்ற கிருபா ஆகியோரின் மைத்துனரும் றொசாந், தட்ஷா, வினோ, மயூரி, மயூரன், மஞ்சு, மதுரா, மதுசலா, றீகன், றீதியா, அகீவன், வேணு, வேணுஷன், சரணியா, கரிஷன் ஆகியோரின் பேரனும் பொனிபஸ் தங்கா, கொட்றி, ராஜா, பாபு, அனுஷியா, சர்மிலா ஆகியோரின் மாமனுமாவார்.

இன்று (22-07-2007) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் 22/1, விதானையார் வீதி, சுண்டிக்குளியில் உள்ள அவரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத் திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*22/1, விதானையார் வீதி, சுண்டிக்குளி.* (62843)
தகவல்: **குடும்பத்தினர்**

## திருமதி இந்திராணி கந்தசாமி



மானிப்பாய் வடக்கு, இராஜகாரியர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இந்திராணி கந்தசாமி அவர்கள் (20-07-2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு மகளும் கந்தசாமியின் அன்பு மனைவியும் சுமதி, சுதாகரன் (ஜேர்மனி), சுவித்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் வசந்தகுமார், ஜெனா ஆகியோரின் மாமியும் இராசமலர், (அமரர்) தங்கராசா, மகேந்திரம் (குணராசா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் துரைராசா, பவளம் (அமரர்), தம்பித்துரை(அமரர்), ராசாத்தி ஆகியோரின் மைத்துனியும் டினிசியா, விதுஷன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*இராஜகாரியர் வீதி, மானிப்பாய் வடக்கு.* (62844)
தகவல்: **இ.வசந்தகுமார்** *(மருமகன்), (பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய்).*

## விற்பனைக்கு

P4 கணனி (U.P.S. உடன்) 30,000/=
80 CB HID 6,000/=
தொடர்பு: T.P.: 0779 048404
*பருத்தித்துறை.* (C/53001)

## விற்பனைக்கு

டிஸ் அன்ரனா சிநேகா ரிசீவருடன் 8 தமிழ் அலைவரிசைகள், 6 ஆங்கில மூவி அலைவரிசை யுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: **T.P.: 0777251188** (62842)

## தவறிவிட்டது

கைதடி தெற்கு, கைதடியைச் சேர்ந்த பாலசிங்கம் நிறோஜா என்பவருடைய விசேட அடையாள அட்டை கல்வியங்காட்டுக்கும் முத்திரைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சிவன்பண்ணைவீதி, 33/1, கொட்டடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (62843)

## விற்பனைக்கு உண்டு

**நல்லின கிறேடன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.**
கிராமக்கோடு, புலோலி தெற்கு, புலோலி.
(பொற்றோல் செற்றுக்கு அருகில்)
T.P.: 0776401021
**S.சுதாகரன்** (C/53004)

## மணமகள் தேவை

*யாழ்.றோ.கத்தோ. 1974 ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு வெளிநாட்டில் P.R. உள்ள மணமகள் தேவை. பிள்ளை இல்லாத விதவைப் பெண்களும் விண்ணப்பிக்கலாம்.*
தொடர்பு: **அ.இன்பகுமார், 736, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.** (62838)

## உடன் விற்பனைக்கு

192, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் பெருமாள் கோயில் சந்திக்கும் பிறவுண் வீதி சந்திக்கும் இடையில் 2½ பரப்புக்காணியில் 60 அடி நீளம், 40 அடி அகலம் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. விலை ரூபா 81,000,00/- (எண்பத்தொரு இலட்சம்)
பார்வையிடும் நேரம்.
மு.ப. 9 - 12 மணிவரை
பி.ப. 3-5 மணிவரை
தொடர்பு: **தேவன், 192, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.** (62839)

## பதவி வெற்றிடம்

எமது ஸ்தாபனத்தில் பின்வரும் பணியாளர்களுக்கு பதவி வெற்றிடம் உள்ளது. தகுதியும் முன்அனுபவமும் உள்ளோர் முழு விவரம் அடங்கிய சுய விவரக் கோவையுடன் சொந்தக் கையெழுத்தில் 31.07.2007 இற்கு முன் கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

1) கணனி அறிவுள்ள கணக்குப் பதியுநர் - 3
2) எழுதுவினைஞர் - 2
3) களஞ்சியப் பொறுப்பாளர் - 2
4) பாதுகாப்பு பணியாளர் - 1

**JAFFNA HARDWARES**
**Asian Paints Jaffna Depot**
*32, Stanley Road, Jaffna.*
(62847)

## கண்ணீர் துளிகளை காணிக்கையாக்குகின்றோம்



**திருமதி**
**மகேஸ்வரன் ஜெகதீஸ்வரி**

பண்பின் பிறப்பிடமே பாசத்தின் உறைவிடமே
ஜெகம் போற்றி நின்ற ஜெகதீஸ்வரியே
கொடும் துயரம் கொண்டு கொதிக்கின்றோம்
உன் பிரிவால்
ஜெகஜோதியானாய் இன்று நீ

இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.


சி.இரத்தினம் குடும்பத்தினர்
(நல்லிமாமா)
(62046)

## பரிசளிப்பு விழா

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட வலய மட்ட சிந்துநடைக் கூத்து மற்றும் இசை நாடகப் போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலைகளுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இன்று காலை 10.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் பரிசில்கள் வழங்கப்படுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (1-207)

## இரண்டாம் ஆண்டு நினைவுதினம்

மண்ணில் 06 - 04 - 1910
விண்ணில் 14 - 08 - 2005



**சுப்பையா பொன்னம்பலம்**

*எம் அன்பின் உறைவிடம் எம்மை*
*மீளாத்துயரில் ஆழ்த்தி*
*இரண்டு ஆண்டுகள் கடந்து விட்டாலும்*
*உங்கள்நினைவு எம் நெஞ்சை விட்டு*
*என்றென்றும் நீங்காது உங்கள் ஆத்ம சாந்திக்காக*
*எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

43, பெரியதம்பிரான் வீதி, வண்ணார்பண்ணை.
**பொ.நடராசா** *(மகன்).*
(62845)

## நன்றி நவில்கிறோம்



**அமரர் கந்தப்பு பூதத்தம்பி**

(இளைப்பாறிய சிரேஷ்ட தபால் அதிபர்)

**மலர்வு : 12-02-1928 உதிர்வு : 20-06-2007**

(வடகோவை - பிறப்பிடம், வாழ்விடம் - கோண்டாவில் இறுதிவசிப்பிடம் - இல.24, LAUNCESTON ROAD, PERIVALA, UB6, EU, LONDON - 2089988450)

உத்தமனார் உலகை விட்டுச் சென்ற பொழுது
உணர்வு பூர்வமாக ஊழைநொந்தோர்
... துடைத்தோர்க்கும் நன்றி
உடன் நின்று ...
உற்றார்க்கும் நன் உறவினருக்கும்
நண்பர்கள் எல்லோருக்கும் நன்றி
உருக்கமான பிரசுரங்கள், மலர்வளையங்கள்.
உரைகள் வாயிலாகச் சோகத்தைப் பகிர்ந்தவர்க்கும் நன்றி.
உள்ளன்போடு வெளிநாடுகளிலிருந்து தவறாது
நினைவலைகளை நல்கியோருக்கும், கொழும்பில் உள்ள
சகோதரர்கள், துயர் துடைக்க நீண்ட கரங்களுக்கும் நன்றி.
உத்தமரின் நினைவு மலருக்கு ஆசியுரை, ஆக்கங்கள்
நல்கியோருக்கும் நன்றி.

நேற்று (21-07-2007) சனிக்கிழமை லண்டனில் நடைபெற்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் விருந்திலும் கலந்து சிறப்பித்தோருக்கும் நன்றிப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

தகவல்
**மனைவி, பிள்ளைகள்** (U.K.),
**சகோதரர் பூ.க.இராசரத்தினம், வெள்ளவத்தை** (S.L.)
(சி/53006)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 19 * 11 * 1941
ஆண்டவன் அடியில் 22 * 06 * 2007



**திருமதி கனகரத்தினம் சந்திரவதி**

*அன்புத் தாயே!*
*ஏனம்மா இந்த மௌனம்*
*எங்கள் உள்ளம் தாங்காதம்மா*
*தவிக்கிறோம் அம்மா.*

சகல விதங்களிலும் உதவி செய்த எல்லோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்,

*26/17, ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.* (62836) **சந்திரன் குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தாம் முன்னர் ஏற்றுக்கொண்டதை இப்போது மறந்துவிட்டார் மஹிந்தர்

தென்னிலங்கையில் இப்போது கிளப்பப்படும் பெரும் அரசியல் சித்தாந்த சர்ச்சை என்ன தெரியுமா?

'பயங்கரவாதிகளான' விடுதலைப் புலிகளுக்கு இலங்கைத் தீவில் சட்டரீதியான அதிகாரப் பிரதேசம் இருக்கின்றது என ஒப்புக்கொண்டு, அந்தப் பகுதிகளைப் புலிகளுக்குத் தாரைவார்த்த தென்னிலங்கை அரசியல் தலைமை எது என்பதுதான் அந்தச் சர்ச்சை.

இரு பிரதான சிங்களக் கட்சிகளும் இவ்விடயத்தில் மாறி, மாறி ஒன்றின் மீது மற்றது குற்றம் சுமத்துகின்றன.

*''பயங்கரவாதத்துக்கு சட்டரீதியான அதிகாரப் பிரதேசம் ஒன்று இருக்கின்றது என்பதை ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் மூலம் ஏற்றுக்கொண்டார். இதுபோன்ற அநியாயமான செயல் இலங்கையைத் தவிர உலகில் வேறெந்தத் தேசத்திலும் இடம்பெற்றிருக்காது''* - என்று கடந்த வியாழனன்று 'கிழக்கு உதயம்' நிகழ்வில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த அறிவிப்பே இந்த சர்ச்சைக்குக் காரணம்.

இவ்வாறு பயங்கரவாதத்திற்கு சட்டரீதியான பிரதேசம் ஒன்றைத் தாரைவார்த்து உடன்படிக்கை ஒன்றைச் செய்ததன் மூலம் குற்றமிழைத்துள்ளது இலங்கை என்றும் அத்தகைய குற்றத்தை இழைத்த நாடு உலகில் இலங்கையைத் தவிர வேறெதுவாகவும் இருக்கமுடியாது என்றும் பிறிதொரு நிகழ்வுக்குத் தாம் அனுப்பிவைத்த செய்தியில் மீளவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

யுத்த சன்னதம் கொண்டு போர் வெறியுடன் நிற்கும் தென்னிலங்கைத் தலைவருக்கு அதன் காரணமாக இன்று யுத்த நிறுத்த உடன்படிக்கை வேம்பாகக் கசக்கின்றது. தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் தமது ஒரே இலக்குக்குக் குறுக்காக அந்த ஒப்பந்தம் - புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை ஏற்று அரசுத் தரப்பு அவ்வாறு மதிக்கவேண்டும் என்ற ஒப்பந்த வாசகம் - நிற்பதால் அது சகிக்க முடியாததாக இருக்கின்றது அவருக்கு. அதனால்தான் இந்த ஒப்பந்தம் குறித்து இவ்வாறு இப்போது கனன்று சீறுகின்றார் அவர்.

ஆனால் -

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் சட்டரீதியான ஒரு பிரதேசம் இருப்பதை எழுத்துபூர்வமாக ஒப்புக்கொள்ளும் இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையை அப்படியே வரிக்கு வரி ஏற்று நடைமுறைப்படுத்த தமது அரசு தயார் என்று 'ஜெனிவா I' அமைதிப் பேச்சில் தமது அரசே எழுத்து மூலம் ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொண்டிருப்பதை அவர் மறந்துவிட்டாரா? அல்லது மறைத்துவிட்டாரா?

தாம் ஆட்சிக்கு வந்து மூன்று மாதத்தல் 2006 பெப்ரவரியில் தமது அரசு புலிகளோடு நடத்திய முதலாவது அமைதிப் பேச்சின் - 'ஜெனிவா I' பேச்சின் - முடிவில் இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை செம்மையாக நடைமுறைப் படுத்தத் தமது அரசு முழு ஒத்துழைப்பு நல்கும் எனத் தெரி வித்து கூட்டறிக்கையில் ஜனாதிபதி மஹிந்தரின் அரசுப் பிரதிநிதிகள் ஒப்பமிட்டதன் மூலம் அந்த ஒப்பந்த வாசகங்களை அவரும் அவரது அரசுத் தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதையும் -

ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டதன் மூலம் புலிகளின் கட்டுப்பாட்டில் சட்டரீதியான ஒரு பிரதேசம் உள்ளது என்பதை உறுதிப்படுத்தும் ஒப்பந்த வாசகத்தை அவரும் அவரது அரசுத் தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதையும் -

இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்துவது பொருத்தமானதாகும்.

அது மட்டுமல்ல. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளோடு செய்துகொண்ட இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் செல்லுபடித் தன்மை இலங்கை உயர்நீதி மன்றில் பரிசோதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருப்பதையும் சுட் டிக்காட்டுவது பொருத்தமானது.

சற்றேனும் அரக்கவோ, நெகிழ்த்தவோ, விட்டுக்கொடுக்கவோ இடமளிக்காமல் இரும்புச் சட்டகமாக இறுகிப்போய் கிடக்கும் இலங்கை அரசமைப்பையும் அதன் எஃகு போன்ற வலுவான விதிகளையும் முழு அளவில் தாங்கி அதனை வலிமையாகப் பற்றி நிற்கிறது இலங்கையின் நீதித்துறையும் நீதிமன்றங்களும். அத்தகைய உயர் நீதிமன்றமே இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையை சட்டத்தின் அடிப்படையில் நிராகரிக்க மறுத்துவிட்டது. இதனால் புலிகளிடம் சட்டரீதியாக ஒரு நிர்வாகக் கட்டுப்பாட்டுப் பிரதேசம் உண்டு என்ற உண்மையை - யதார்த்தத்தை - ஏற்றுக்கொள்ளும் அரசியல் முடிவு இலங்கை நீதித்துறையாலும் நிராகரிக்கப்படவில்லை என்பது தெளிவு.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் மீது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்ததும் அதற்குப் பதிலடியாக விளக்கம் கொடுக்க முன்வந்திருக்கின்றது ஐ.தே.கட்சி.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை யுத்தநிறுத்த ஒப்பந்தம் மூலம் ரணில் ஏற்று அங்கீகரிப்பதற்கு முன்னரே மஹிந்த ராஜபக்ஷவின் கட்சியின் முன்னாள் தலைவி சந்திரிகா குமாரதுங்க ஏற்றுக்கொண்டுவிட்டார். 1994-1995 காலப் பகுதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புலிகளுடன் சமரசம் செய்தபோது அவரும் இவ்வாறு புலிகளின் கட்டுப்பாட்டில் பிரதேசம் இருப்பதையும் அரசு மற்றும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு இடையில் எல்லைகள் இருப்பதையும் ஒப்புக்கொண்டிருந்தார் எனச் சுட்டிக்காட்டி ஜனாதிபதி மஹிந்தவுக்கு பதிலடி தந்திருக்கிறது ஐ.தே. கட்சி.

ஆக புலிகளிடம் கட்டுப்பாட்டுப் பிரதேசம் ஒன்று இருப்பதை முதன்முதலாக சட்டரீதியாக ஏற்று அங்கீகரித்தவர் யார் என்பது குறித்து தென்னிலங்கையின் இரு பிரதான சிங்களக் கட்சிகளும் மாறி மாறி ஒருவர் மீது மற்றவர் குற்றம் சுமத்தித் தர்க்கிக்கின்றன.

இந்த இரு கட்சியினருமே ஏற்றாலென்ன, ஏற்காவிட்டாலென்ன? அங்கீகரித்தால் என்ன, அங்கீகரிக்காவிட்டால் என்ன? ஈழத்தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் தங்கள் தாயகப் பூமியின் கணிசமான பிரதேசத்தை பௌத்த - சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டு, சட்டரீதியாக அதை நிர்வகிக்கின்றனர் என்பதே உண்மை யதார்த்தம்.

இந்த உண்மையை சிங்களம் ஏற்றால் மட்டுமே சமரசம் சாத்தியம்.

# உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவரின் இறுதிநேரத் தயார்படுத்தலுக்கும் மின் தடை குந்தகம்!

## மாணவர்கள், பெற்றோர்கள் பெரும் விசனம்

யாழ்ப்பாணம்,ஜூலை22

குடாநாட்டில் தற்போது இரவு நேரங்களில் அடிக்கடி ஏற்படும் மின் தடை காரணமாக மாணவர்கள் இரவில் உரியவாறு பாடங்களைப் பயில முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து மாணவர்களும், பெற்றோரும், கல்வியியலாளர்களும் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இரவு நேரங்களில் முன்னறிவித்தல் இன்றி அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுகிறது.

மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் நேரமாகிய மாலை 6.30 மணி முதல் இரவு 9.30 மணிவரை இந்த மின்வெட்டு நீடிக்கின்றது.

சில இடங்களில் குறித்த ஒரு நேர அட்டவணை இல்லாமல் மின்வெட்டு மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் மாணவர்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

நாடு முழுவதும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி - இன்னும் இரண்டு வாரங்களில் - ஆரம்பமாகின்றது.

இவ்வாறான முக்கியமான தருணத்திலாவது மின்தடையைச் சீர்செய்யக் கூடாதா என்று மாணவர்கள், பெற்றோர்கள், கல்விமான்கள் உட்படப் பலரும் வினா எழுப்புகின்றனர். கவலை தெரிவிக்கின்றனர்.

ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சை, மாணவர்களின் உயர் கல்வியில் முக்கியமான ஒரு கட்டம். அவர்களது எதிர்காலக் கல்வியை தீர்மானிக்கும் - கனவை நனவாக்கும் - ஏன் வாழ்வையே நிர்ணயிக்கும் - பரீட்சையாக அமைந்துள்ளது.

இவ்வாறான முக்கியமானதொரு பரீட்சைக்கு மாணவர்கள் தம்மைத் தயார்படுத்திக்கொண்டிருக்கும் இறுதி வேளையில் - மின்சாரம் முக்கியமாகத் தேவைப்படும் இரவு வேளையில் சீரான ஒழுங்கு அட்டவணை எதுவும் இன்றி நினைத்த நினைத்த மாதிரி மின் தடை அமுல் செய்யப்படுவதால் அவர்களது கல்வி திட்டமிட்டுப் பாழடிக்கப்படுகின்றதா என்ற சந்தேகமும் பல தரப்புகளிலும் ஏற்பட்டுள்ளது.

உயர்தர மாணவர்கள் தமது பரீட்சைக்கு இறுதி நேரத்தில் தயார்படுத்தலை மேற்கொள்வதற்கேனும் வழி செய்யும் விதத்தில் மின்வெட்டுக் குறித்து உரிய அதிகாரிகள் தக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று மாணவர்களும் பெற்றோரும் எதிர்பார்க்கின்றார்கள். அவர்கள் கேட்கும் உதவி கிடைக்குமா?

(அ-50)

# இன்றைய விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை22

யாழ்.மாவட்ட கரபந்தாட்டச் சங்கம் நடத்திய கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

கரந்தாட்டச் சங்கத் தலைவர் கப்டன் டி.ஏ.எம்.குணசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் என்.சிவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(அ-1)

* * *

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். வலயப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்றுபிற்பகல் 3 மணிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் கொழும்புத்துறை சென். யோசப் மகாவித்தியாலயமும் மோதுகின்றன. மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் யாழ். மத்திய கல்லூரியும் மோதுகின்றன.

இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக சென்.பற்றிக்ஸ் கல்லூரி உப அதிபர் அருட்தந்தை ஜெரோ செல்வநாயகமும் சிறப்பு விருந்தினராக யாழ். உதைபந்தாட்ட லீக் செயலாளர் எம். பிரான்ஸிஸும் கலந்துகொள்வர். (1)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை22

யாழ். பாலர் கல்விக் கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பதினான்கு ஞானக் குழந்தை இல்லப் பாலர் பாடசாலைகள் பங்குபற்றும் 41 ஆவது வருடாந்த விளையாட்டு விழா இன்று காலை 9 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம் கலந்துகொள்வார்.

(அ-1)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை22

அச்செழு வளர்மதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறும்.

முன்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் க.கந்தசாமி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் கலந்துகொள்வார்.

(அ-1)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை22

சாரசாலை வடக்கு முன்பள்ளிச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் த.சபாநாயகம் தலைமையில் நடைபெறும்.

போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சு.பாக்கியராசாவும் கலந்துகொள்வர்.

(1-207)

# விடை தெரியாத வினாவாக நெடிது நீளும் மூதூர் கிழக்கு மக்களின் மீளக்குடியமர்வு!

'கிழக்கின் உதயம்' அரசுக்குப் பெரு வெற்றி தந்துள்ளதாக அரசு வெற்றி விழாக் கொண்டாட்டங்களை நாடளாவிய ரீதியில் கொண்டாடிவருகின்றபோதிலும், இந்த வெற்றி எவ்வளவு தூரம் வலிதானது என்பது தொடர்பாக அரசியல் விமர்சர்கள் பல்வேறு முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த வெற்றி தொடர்பாக அரசு ஒரு விதமான கருத்தைத் தெரிவிக்கும்போது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவோ எதிர் மாறான கருத்தினை வெளியிட்டு வருகின்றார்.

இவ்வாறு கிழக்கின் உதயம் குறித்துப் பேசப்பட்டு வரும்வேளையில், இந்த யுத்தம் சாதித்தது என்ன என்ற கேள்வியும் பெரிதாக எழுப்பப்பட்டு வருகின்றது.

இத்தனைக்கும் இடையில் 'கிழக்கின் உதயம்' யுத்த முனைப்பின் விளைவாக இடம்பெயர்ந்து கடந்த பல வருடங்களாகவே அகதி வாழ்வு வாழ்ந்துவரும் மக்களின் நிலை தொடர்பாக நோக்குவோமாயின் சண்டப் பிரசண்டத் தனங்கள் தான் வெளியாகின்றன.

குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்குப் பிரதேசத்திலிருந்து கடந்த ஓகஸ்ட் மாதம் - ஒரு வருடத்திற்கு முன்னர் - தங்கள் சொந்த மண்ணை விட்டு வெளியேறிய மக்கள் இன்று நிர்க்கதியான நிலையில் உள்ளனர்.

மூதூர் கிழக்குப் பிரதேசம் இன்று உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட போதாக்குறைக்கு, அங்கு அனல் மின் நிலையம் ஒன்றினையும் அமைக்கப்போவதாக அரசு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் மீண்டும் தங்கள் பாரம்பரிய மண்ணைத் தரிசிக்ககூட முடியாது போய்விடுமோ என்ற ஏக்கம் இந்த மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றது.

அரசோ இந்த மக்களைப் பெருத்தமான இடத்தில் குடியேற்றப்போவதாகவும் கங்கணம் கட்டி நிற்கிறது. ஆனால் இந்தப் பிரதேச மக்களோ தங்கள் பாரம்பரிய பிரதேசத்தை விட்டு வேறு எங்கும் சென்று குடியேறப்போவதில்லை என்று தங்கள் ஆட்சேபத்தைத் தெரிவித்து வருகின்றனர்.

மூதூர் தெற்குப் பிரதேச மக்கள் தமது முந்திய வாழ்விடங்களில் மீளக்குடியேற்றப்பட்டு வரும் நிலையில், தாங்கள் மட்டும் ஏன் இத்தகைய பாரசட்சமான முறையில் நடத்தப்படவேண்டும் என்று மூதூர் கிழக்கு மக்கள் கேட்கின்றனர். இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் விரைவில் மூதூருக்கு விஜயம் மேற்கொள்ளப் போவதாகத் தெரிவித்துள்ளனர். மூதூர் கிழக்குப் பிரதேசத்திற்குச் சென்று அங்குள்ள நிலையினை ஆராயப்போவதாகவும் ஆணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

மூதூர் கிழக்கு மக்களின் மீள்குடியமர்வு முறைப்பாடு ஒன்று உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோதும், அதுவும் பயனளிக்கவில்லை. அதனைத் தொடர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து மூதூர் கிழக்கு மக்கள் சார்பில் ஆராயப்பட்டு வருகிறது.

எப்படியோ அகதிகளாக்கப்பட்ட மூதூர் கிழக்குப் பிரதேச வாசிகள் இன்றும் திரிசங்கு சொர்க்க நிலையிலேயே உள்ளனர். அகதி முகாம் வாழ்வே நிரந்தரமாகி விடுமோ என்ற அச்சம் அவர்களை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றது. தங்கள் உடமைகள், சொத்துக்கள், விவசாய பூமி என்று அனைத்தையுமே இழந்து வாழ்வதில் என்ன பயன் என்ற விரக்தி நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் இந்த மாத முடிவுக்குள் இடம்பெயர்ந்த திருகோணமலை மாவட்ட மக்கள் அனைவரையும் மீளக்குடியேற்றப்போவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதற்கு அமைவாக மூதூர் தெற்குப் பிரதேசத்தில் புதைக்கப்பட்ட மிதிவெடிகளை அகற்றும் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திருமலையிலிருந்து கோணகன்**

இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் மீளக்குடியேற்றப்பேவதாக அரசு அறிவித்துள்ள நிலையில், மூதூர் கிழக்குப் பிரதேச மக்களின் நிலை என்ன என்று அந்த அதிகாரிகளாலும் உறுதியான பதிலைக் கூறமுடியவில்லை. விடை தெரியாத வினாவாக நெடிது நீள்கிறது மூதூர் கிழக்கு மக்களின் மீளக்குடியமர்வு விவகாரம்.

இவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதன் மூலமே அரசு கூறும் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் பூர்த்தியடைந்ததாகக் கூறமுடியும். கிழக்கின் உதயம் மூதூர் கிழக்குப் பிரதேச மக்களுக்கு என்ன கூறப்போகின்றது? அதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

மேலும் திருகோணமலை நகரம் கூட இன்று உயர் பாதுகாப்பு வலயம் போன்று மாறியுள்ளது. நகரின் பல்வேறு பகுதிகளிலும் படையினரின் காவலரண்கள் அமைக்கப்பட்டு சோதனை நிலையங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

## நாளை

| | |
|---|---|
| ஆடி - 7 | திங்கட்கிழமை 23.07.2007 |
| திதி : நவமி | பின்னிரவு 03.04 |
| நட்சத்திரம் : சுவாதி | மாலை : 06.20 |
| சுபநேரம் | : 12.02 - 01.32 |
| ராகுகாலம் | : 07.32 - 09.02 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு தனிப்பட்ட பிரதேசத்தை முதலில் வழங்கியவர் சந்திரிகாவே

## ரணில் அல்லர் என்கிறார் லக்ஷ்மன் கிரியெல்ல

கொழும்பு, ஜூலை 22

''முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே புலிகளுடன் இரகசிய ஒப்பந்தங்களை செய்து கொண்டார். புலிகளுக்கான அதிகாரப் பிரதேசம் அவர் காலத்திலேயே வழங்கப்பட்டுவிட்டது. இதற்கு ஐ.தே. கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க எவ்வகையிலும் பொறுப்பானவர் அல்லர்''

-இவ்வாறு ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''பயங்கரவாதத்திற்கு சட்டரீதியான அதிகாரப் பிரதேசம் ஒன்று இருக்கின்றது என்பதை ரணில் புலிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் மூலம் ஏற்றுக் கொண்டார். இது போன்ற அநியாயமான செயல் ஒன்று இலங்கையிலன்றி உலகில் வேறெங்கும் இல்லை'' என்று 'கிழக்கின் உதயம்' நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் முகமாகவே லக்ஷ்மன் கிரியெல்ல இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவித்தபோது கூறியதாவது:-

1995ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் இரகசிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருந்தார். இது பலருக்கும் தெரியாது. அந்த ஒப்பந்தத்தில் 400 மீற்றர் தூரத்தில் இரு தரப்பினரும் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமென்றும்-

100 மீற்றர் எல்லைகளைத் தாண்டி இராணுவத்தினர் புலிகளின் பகுதிக்கோ அல்லது புலிகள் இராணுவத்தினரது பகுதிக்கோ வர முற்பட்டால் அவர்கள்மீது தாக்குதல் நடத்த அதிகாரம் உண்டு என்றும், அவ் ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

அரசின் படை நடவடிக்கைகளின் மூலம் பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்க முடியாது. கிழக்கின் பிரதம செயலாளரின் படுகொலை இதற்கு எடுத்துக்காட்டு.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிற்கு அனைத்துக் கட்சிகளும் தமது தீர்வுத் திட்ட யோசனைகளை முன்வைத்துவிட்டன. ஆளும் தரப்பு இதுவரை தீர்வுத் திட்ட யோசனையை முன்வைக்கவில்லை. அவர்களால் முன்வைக்கப்படும் யோசனை சிறுபான்மை மக்களின் மனதிற்கு ஆறுதல் தராது- என்றார். (சி)

# அமைச்சர் கோரியும் சிங்கக் கொடிகளை மக்கள் பறக்கவிடாமல் தவிர்த்தது ஏன்?

## அரசின் கபடநாடகம் புரிந்ததால்தான் என்கிறார் ஸ்ரீபதி

"தொப்பிகல வெற்றியை வியாபாரமாக்கி, அரசியல் இலாபம் தேட முனையும் அரசின் கபட நாடகத்தை மக்கள் நன்றாகப் புரிந்து கொண்டுள்ளனர். அதனால்தான், அரசு கோரிக்கை விடுத்தும், வீடுகளில் சிங்கக் கொடிகளைக் கட்ட மக்கள் மறுத்துவிட்டனர். அரசின் வேண்டுகோளை அவர்கள் நிராகரித்துவிட்டனர். இதேபோன்று கூடிய விரைவில் மக்கள் இந்த அரசையும் நிராகரித்து விடுவார்கள் என்பது உறுதி.

- இப்படி அடித்துக் கூறுகின்றார் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் அவையின் உறுப்பினரான ஸ்ரீபதி சூரியாராய்ச்சி.

ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்ஸ வினால் முன்வைக்கப்பட்ட - முப்படையினருக்கும் நன்றி தெரிவிக்கும் - பிரேரணை மீது நாடாளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

வடக்கே எமது படையினர் புலிகளுடன் தீவிரமாகப் போரிட்டுக் கொண்டிருக்கின்ற போது, அரசு அதனைத் தடுத்து, கிழக்கு மாகாணத்திற்கு இராணுவ நடவடிக்கைகளை திசை திருப்பிவிட்டது. இது ஏன்?

வடக்கே கிளிநொச்சியில்தான் புலிகளின் தலைமையகம் இருக்கின்றது. பிரபாகரன் இருக்கின்றார். விமானப் படை இருக்கின்றது. விமானத் தளம் இருக்கின்றது. புலிகளின் கேந்திர நிலையங்கள் அனைத்தும் வடக்கே இருக்கும்போது, ஏன் அங்கு தாக்குதல் நடத்தாமல் கிழக்கைக் குறிவைத்தது அரசு?

அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் இரகசியக் கூட்டு ஒப்பந்தம் இருக்கின்றது. அதன்சூட்சம்தான் கிழக்குத்தாக்குதல்.

மன்னார் புளியங்குளம் பகுதியில் அரச படையினருக்கும், புலிகளுக்கும் இடையில் கடும் சமர் இடம்பெற்றுள்ளது. அங்கே போரிடும் படையினருக்கு போதிய வசதிகள் இல்லை. தேவையான உணவு, மருந்து வகைகள் இல்லை. இவ்வளவுக்கும் மத்தியில் பெரும் தியாகத்துடன் படையினர் போரிடுகின்றனர்.

ஆனால், அரசு கிழக்கு வெற்றியை விழா வெடுத்து அரசியல் இலாபம் தேடுகின்றது. இது நமதுபடையினின்தியாகச்செயலைக் கொச்சைப்படுத்தும் ஒரு செயலாகும்.

மாவிலாறு பிரதேசத்தில் எமது படையினர் தீவிரமாகத் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போது, அரசு எழில்காந்தன் என்பவரின் மனைவி மூலமாகப் புலிகளுக்கு 80 கோடி ரூபா வழங்கியுள்ளது. இதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன.-என்றார்.

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் (இரண்டாயிரம்) இராசமணி



பண்டத்தரிப்பு, சில்லாலை வீதியைப் பிறப்பிடமாகவும் மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் (இரண்டாயிரம்) இராசமணி 15.07.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியலிங்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் (இரண்டாயிரம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற தங்கராணி மற்றும் ரஞ்சிதம், வரேந்திரன் (ஜேர்மனி), புவனேந்திரன் (ஜேர்மனி), கமலாதேவி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் கதிரவேலு-கனகரட்ணத்தின் (கனடா) மைத்துனியும் செல்லம்மா, செல்லத்துரை, அமரர் துர்ராஜா, நவரட்ணம், கணேசலிங்கம், பாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும் தங்கராசா, கருணாதேவி, ஜெசி, இளங்கோ ஆகியோரின் பாசமிகு மாமியும் சுரேந்திரன் (கனடா), லதா (லண்டன்), கயேந்திரன், தயேந்திரன், கோபிராஜ், கபிலராஜ், மதிராஜ், அருந்ததி, சிவகௌரி, தர்மகீர்த்தி, அருந்தா, கிருஷ்ணா, சபீனா, ஆதவன், அபினயா ஆகியோரின் பேர்த்தியும் திலக்சியின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது மாகியப்பிட்டி இல்லத்தில் இன்று (22.07.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணி அளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மாகியப்பிட்டி கொடுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மாகியப்பிட்டி. குடும்பத்தினர்.

### ஸ்ரீல.சு.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மங்கள சமரவீரவுக்கும் இடையில் கைச்சாத்தான புரிந்துணர்வு உடன்பாட்டை சந்திரிகா வரவேற்ற பின்னணியிலேயே -

அவருக்கு முக்கியமான கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. கட்சியில் இருந்து அவரை முற்றாக வெளியேற்ற எடுக்கப்பட்டுள்ள முன்னோடி நடவடிக்கை இது என்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-1)

### இனப்பிரச்சினைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீண்டநாளைய நிலைப்பாடாகும்.

அதனை மனதில் வைத்தே ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து செயற்பட முன்னர் முயற்சிகளைமேற்கொண்டேன். அது கைகூடவில்லை. -

இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய பிரிவு ஒன்று ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்று சேர்ந்து உழைக்க முன்வந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. - என்று முன்னாள் ஜனாதிபதி மேலும் சொன்னார். (அ)

### அம்பாறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேடுதலின்போது ஐந்து ரி 56 ரகத் துப்பாக்கிகள் மற்றும் மகஸின்களையும் வேறு ஆயுதங்களையும் தாம் மீட்டதாக அதிரடிப் படையினர் அறிவித்துள்ளனர்.

இத்தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல்கள் வெளியாகவில்லை. (அ-1-ரி)

### எந்தச் சந்தர்ப்பத்திலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு மாகாணத்தை பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து விடுவித்தமையைத் தொடர்ந்து நாடு முழுவதும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கக் கூடிய வாய்ப்புகள் தோன்றியுள்ளன - என்றார் ஜனாதிபதி.

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் ''மக்களுக்குத் தெளிவுபடுத்தும்'' பொதுக்கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி கலந்து கொள்ளும் முதல் சந்திப்பு இது என்று தெரிவிக்கப்பட்டது. (அ-ரி)

### கிழக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடுருவிக் கிழக்கு மாகாணசபைச் செயலாளரைக் கொலை செய்த சம்பவம் இதை ஊர்ஜிதம் செய்கிறது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அடுத்து வரும் வாரங்களில் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படும் சம்பவங்கள் கிழக்கின் பாதுகாப்பு நிலைமைக்குச் சோதனையாக இருக்கும் என்றும் அரசுத் தரப்பு தனது உறுதித் தன்மையை நிரூபிக்கும் என்றும் பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-1)

துரித தபால்கள், பொதிகள் சேவை
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப்பொருள்கள், உடுபுடைவைகள் மற்றும் VDO பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி - 021 222 7835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி தொலைபேசி - 021 222 7310

மானிப்பாயில் முதன் முதலில்
பிரிவு - 3 ஆரம்பம்!!
ஒரு பிரிவில் 10 மாணவர்கள் மட்டும்.
(தூர இடங்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு விசேட வகுப்புக்களும் ஆரம்பம்!!)
வகுப்புக்கள்யாவும் 26.07.07 அன்று 12.30க்கு ஆரம்பம்.
Diploma in Mobile Phone Repairing
(சகல வகையான கைத்தொலை பேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி)
மேலதிக விபரங்களுக்கு :-
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay. T.P:- 0777-110862
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)

குடாநாடெங்கும் விநியோகஸ்தர்கள் தேவை
நமக்காக நாமே யூலை 22 முதல்
My Computer
மாதாந்த கணினிச் சஞ்சிகை
தகவல் தொழில் நுட்பத்தில் மற்றொரு மைல்கல்
உங்கள் பிரதிக்கு இன்றே முந்துங்கள்
ICT, GIT பயிலும் மாணவர்கள் உள்ளிட்ட சகல தரப்பினருக்கும் ஏற்ற விடயங்களை தாங்கி வெளிவருகிறது
தேவைப்படும் பாடசாலைகள் நிறுவனங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும் : ஒவ்வொரு வீட்டிலும் கொம்யூட்டர் அதற்கு வாங்குங்கள் My Computer
வெளியிடுவோர்: Speed IT net 72/28 பணிக்கர் லேன்,பலாலி வீதி,திருநெல்வேலி தொலைபேசி: 4591871

உங்களின் பெறுமதியான பொருட்களுக்குப் பாதுகாப்பு....
செலவுக்குத் தேவையான பணம்....
செலான் தங்க நகை அடகுச் சேவை...
ஒரு பவுணுக்கு 15,100/-
முத்திரை வரி வங்கியினால் செலுத்தப்படும்
அடகு நகையை விரைவாகத் திருப்பலாம்
இரகசிய உத்தரவாதம்
பகுதிக் கொடுப்பனவு வசதி
குறைந்த வட்டிக்கு அதிக முதல்
செலான் வங்கி - யாழ்ப்பாணக் கிளை
இல.560&562, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
கொடுக்கல் வாங்கல் நேரம் : வார நாள்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை : சனிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் மதியம் 12 மணிவரை
தொலைபேசி இல.: 021 222 3047, 222 3755
செலான் வங்கி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.07.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.